விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 116 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 31 சனிக்கிழமை (13.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## புத்தாண்டைத் தொடர்ந்து
# நாடளாவிய ரீதியில் பாரிய போராட்டம்
## தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ் - சிங்களப் புத்தாண்டைத் தொடர்ந்து இலங்கையில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தொழிற்சங்கங்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து துறைகளினதும் தொழிற்சங்கங்கள் குறித்த தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தர பெறுபேறுகள் அடுத்த மாதம்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த மாதத்திற்குள் வெளியிடப்படும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகள் தொடர்பான ஆவ 15

தீக்காயத்துக்குள்ளான
## குடும்பப் பெண் மரணம்
### யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் அடுப்பில் செருகப் 15

## யாழ்.செம்மணிப் பகுதியில் சர்வதேச தரத்திலான மைதானம்
### அமைச்சர் டக்ளஸ், அதிகாரிகள் கள ஆய்வு

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் பகுதியில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்ட மைதானங்களை அமைப்பதற்கான ஏதுநிலைகள் குறித்து யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா துறைசார் அதிகாரிகளுடன் குறித்த பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை வரவேற்கும் செம்மணி வளைவு பகுதியை அண்டிய நிலப்பரப்பில் சர்வ 15

நீண்ட நாட்களின் பின்னர்
## நாட்டில் கொரோனாவால் ஒருவர் திடீர் மரணம்

(குருநாகல்)

நீண்ட நாட்களின் பின்னர் மற்றுமொரு கொரோனா மரணம் நேற்று நாட்டில் பதிவாகியுள்ளது.

குருநாகல் போதனா வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குறித்த நபர் உயிரிழந்த நிலையில், சந்தேகத்தின் 15

## நீர்ப்பாசன வாய்க்காலில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு
### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதியில் உள்ள நீர்ப்பாசன வாய்க்காலில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த பெனிஸ் நிமலன் (வயது - 37) என்ற இரண்டு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் 15

## டிப்பர் வாகனம் மோதியதில் தொழில் வழிகாட்டி ஆலோசகர் பலி
### கைதடி – மானிப்பாய் வீதியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

டிப்பர் வாகனம் ஒன்று மோதியதில் தொழில் வழிகாட்டி ஆலோசனை அதிகாரி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரியான கோண்டாவிலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் (வயது-56) என்ற 15


பூநகரி வாடியடிப் பகுதியில்
## கார் - மோ.சைக்கிள் மோதுண்டு விபத்து
### ஒருவர் உயிரிழப்பு

(கண்டாவளை)

காரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பூநகரி வாடியடிப் பகுதியில் நேற்று 15

பீரிஸுக்கு எதிராக
## ஒழுக்காற்று நடவடிக்கை



15

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர்
### கொள்கையளவில் இணக்கம் சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு தாம் கொள்கையளவில் இணங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய நிர்வாக கூட்டத்தில் சிவசேனை

## எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வெளியேற்றம்



வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய நிர்வாக தெரிவு கூட்டத்திற்குள் அழையா விருந்தாளியாக சிவசேனை அமைப்பினர் சென்றமையால் ஆலய பக்தர்கள் எதிர்ப்பு தெரிவித்து வெளியேறியதுடன் பழைய நிர்வாகத்தை தொடரவும் முடிவு எடுத்துள்ளனர்.

வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் மாவட்ட மட்ட தெரிவுகளுக்கான பொதுக்கூட்டம் நேற்று (12.04) காலை ஒலுமடு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஆலய பூசகர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், ஆலய பக்தர்கள், வேலன் சுவாமிகள், வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தந்தோர் என பலரும் கலந்து கொண்டு கூட்டத்தை ஆரம்பித்தனர்.

இதன்போது, ஆலய நிர்வாகத்தின் அழைப்பின்றி சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம், விபுலானந்த சுவாமிகள் உள்ளிட்ட ஒரு குழுவினர் அங்கு வருகை தந்திருந்தனர்.

குறித்த குழுவினர் குருந்தூர் மலை விகாராதிபதியை இரகசியமாக சந்தித்து அதற்கு ஆதரவு தெரிவித்ததாக கூறி, மக்கள் குறித்த குழுவினரை வெறியேறி நிர்வாகத் தெரிவுக்கு ஒத்துழைக்குமாறு கோரினர். அத்துடன் சிவசேனை முன்னிலையில் நிர்வாகத் தெரிவு இடம்பெறமாட்டாது எனவும், வெடுக்குநாறி மலையில் பல பிரச்சினைகள் நடந்தும் சிவசேனை அமைப்பினர் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளவில்லை எனவும் ஒரு அறிக்கை கூட வெளியிடவில்லை எனவும் மக்கள் தெரிவித்ததுடன், அவர்களை வெளியேறுமாறு கோரினர்.

எனினும், சிவசேனை அமைப்பினர் வெளியேறாமையால் ஆத்திரமடைந்த ஆலய நிர்வாகத்தினர் மற்றும் ஆலய பக்தர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறியதுடன், ஒரு வருடத்திற்கு தற்போதைய நிர்வாக சபையே தொடர்ந்து இயங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியதுடன், மக்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர். மக்கள் சென்ற பின்னும் சிவசேனை அமைப்பினர் பொது நோக்கு மண்டபத்தில் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

(ம-7,33,250,299)

# அண்ணன் தாக்குதல் தம்பி உயிரிழப்பு

கலஹா பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நில்லம்பை யோகலெட்சுமி தோட்டத்தில் தம்பியை அண்ணன் ஒருவர் அடித்து கொலை செய்துள்ள கொடூரச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

யோகலெட்சுமிதோட்டத்தைச் சேர்ந்த 32 வயதான கிட்ணசாமி கருணாநிதி (கவுன்டர்) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய அண்ணன் சில தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலையில் இருந்து வந்துள்ளார்.

அதன்பின்னர் அநுராதபுரம் பகுதியில் கூலி வேலை செய்துவந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் திடீரென ஊருக்கு வந்துள்ளார்.

அண்ணனுக்கும், தம்பிக்கும் இடையில் காணிப் பிரச்சினை இருந்து வந்த நிலையில், அது தொடர்பில் நேற்று முன்தினம் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதை யடுத்து இரவு அது சண்டையாக மாறியுள்ளது.

இதன்போது அண்ணன் கத்தி மற்றும் போத்தலால் தம்பியின் தலைப்பகுதியில் தாக்கிய நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். கைகள்கட்டப்பட்டிருந்த நிலையில் நேற்று காலை உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் அண்ணன் தப்பிச்செல்ல முற்பட்ட போது நில்லம்பை பஸ் நிலையத்தில் வைத்து அண்ணனை ஊர் மக்கள் மடக்கிப்பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸார் மற்றும் கம்பளை தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம், பிரேத பரிசோதனைக்காக பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

(ம-7)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அரசுடன் இணைக்க விடமாட்டோம்

## தயாசிறி ஜயசேகர

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக் காலத்தடை மாத்திரமே விதிக்கப் பட்டுள்ளது.

அதனை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்துடன் சுதந்திரக் கட்சியை இணைப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால் அந்த முயற்சி வெற்றியளிக்க இடமளிக்கப்பட மாட்டாது என சு.க.வின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகள் தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் 18ஆம் திகதி வரை மாத்திரமே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ளவர்கள் அதனை நிரந்தர தடையுத்தரவு என எண்ணிக் கொண்டு செயற்படுகின்றனர்.

அமைச்சுப்பதவியில் உள்ள மோகத்தினால், தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்கு முயற்சிக்கின்றனர். அதன் காரணமாகவே தற்போது கட்சி யாப்பை மாற்ற வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

அதுமாத்திரமின்றி யாப்பிற்கு முரணாக அரசியல் குழு கூட்டத்தையும் கூட்டி பதில் தலைவரையும் தெரிவு செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் செயலாளர் அறிவித்திருக்கின்றார். எனவே சட்ட ரீதியாக நாம் அவர்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்றார்.

(ம-7)

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர்

## பின்புலத்தில் ராஜபக்ஷக்கள் சுமந்திரன் எம்.பி சந்தேகம்

(கொழும்பு)

தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் நடவடிக்கையின் பின்புலத்தில் ராஜபக்ஷக்கள் இருக்கின்றார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக கட்சியாக விரைவில் ஒரு தீர்மானத்தை அறிவிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, தற்போது அரசியல் ரீதியாக தோற்றுப்போயுள்ள ராஜபக்ஷ தரப்பினர் இதன் பின்னணியில் செயற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிடுகின்றார்.

ராஜபக்ஷக்கள் கடந்த காலத்தில் தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயத்தினை தங்களுடைய தேர்தல் வெற்றிக்கான தொரு யுக்தியாகக் கையாண்டதாகவும் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-7)

# 200 கிலோ போதைப்பொருளுடன் 10 மீனவர்கள் கடற்படையால் கைது

(கொழும்பு)

சுமார் 200 கிலோ கிராம் போதைப் பொருட்களுடன் 2 மீன்பிடிப் படகுகள் இலங்கையின் தெற்கே ஆழ் கடல் பகுதியில் கடற்படையினரால் கைப் பற்றப்பட்டுள்ளன.

இரண்டு படகுகளிலும் இருந்து 10 இலங்கை மீனவர்கள் கைது செய்யப் பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

மேலும் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் போதைப்பொருள் கையிருப்பு தற்போது காலி துறைமுகத்திற்கு கொண்டு வரப்படுவதாக தெரிவித்த கடற்படைப் பேச்சாளர், துறைமுகத்திற்கு கொண்டு வந்த பின்னர் குறித்த இரண்டு படகுகளும் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

(ம-7)

**பதவி வெற்றிடம்**

**பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்**

தகைமை

- க.பொ.த உயர்தரம்
- சிங்களத்தில் சரளமாகப் பேசும் திறன்
- வயது 25 - 65
- தகைமையுடைய இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பு :
யாழ்ப்பாணத்தில் இருந்து 7Km தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர்
வலம்புரி நாளிதழ்,
இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

மேலதிக தொடர்புகளுக்கு :
076 097 3121



**யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா**

நாளை 14.04.2024 ஞாயிறு

வசந்த மண்டப பூசை : காலை 8.00 மணி
சுவாமி தேருக்கு எழுந்தருளல் : காலை 9.00 மணி
தேர் உலா : காலை 9.30 மணி

(C-0117)

கோயில் நிர்வாக சபை

**தவறிவிட்டது**

கல்லுண்டாய் காக்கைதீவிற்கும் கோண்டாவில் GPS வீதிகளுக்கும் இடையில் NP MF-1846 எனும் இலக்கத்தை கொண்ட வாகன இலக்கத்தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


077 663 6384
021 222 1764

(428)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருத்தமான தருணம் இது!

# சஜித், அநுரவுடன் தமிழ்த்தரப்புகள் பேச வேண்டும் - தயான் ஜயதிலக



(கொழும்பு)

**உள்நாட்டில் நீண்டகாலமாக அரசியலில் புரையோடிப்போயிருக்கின்ற சிங்கள, பௌத்த தேசிய இனவாதத்தினை களைவதற்கு பொருத்தமான தருணம் ஏற்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தரப்புக்கள் பிரதான போட்டியாளர்களான சஜித், அநுரவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்று இராஜதந்திரியான தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன், தமிழர்களின் அரசியல் போக்கு அவரோகணத்தில் சென்றுகொண்டிருக்கையில், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துகின்ற முயற்சியானது பொருத்தமான வியூகமாக அமையப்போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு,கிழக்கை தளமாகக் கொண்டு செயற்படும் தமிழ் அரசியல் கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான முஸ்தீபுகளை எடுத்துள்ள நிலையில் அதுதொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு உபாயங்களை முன்னெடுத்துள்ளனர். இருப்பினும் அந்த உபாயங்களால் தமிழ் மக்களுக்கு போதுமான அளவில் பிரதிபலங்கள் கிடைத்திருக்கவில்லை.

அவ்வாறான பின்னணியில் தற்போது தமிழ் அரசியல் தரப்புக்கள் அடுத்து நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமது தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

அனைத்துக் கட்சிகளும் இந்த விடயத்தில் ஒருமித்து நின்று செயற்படுவதற்கு முன்வருகின்ற பட்சத்தில் சாத்தியமானதொரு வியூகமாகும்.

ஆனால் கள யதார்த்தத்தின் அடிப்படையில் தமிழ்த்தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தில் அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் இடையில் ஏகமனதான நிலைமைகள் வரப்போவதில்லை.

இதன்காரணமாக, தமிழ் கட்சிகளுக்கு இடையில் காணப்படுகின்ற உறவுகள் தற்போதைய நிலைமையை விடவும் மோசமானதாகவே அடையப் போகின்றது.

அவ்விதமான நிலைமையில், நிறுத்தப்படும் தமிழ் வேட்பாளரால் அதியுச்ச கோரிக்கையான சுயாட்சி உள்ளிட்டவற்றை முன்வைப்பது மிகக் கடினமானதாகவே அமையும்.

1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு 1977 இல் தேர்தலுக்கு முகங்கொடுத்த நிலைமைகள் தற்போது இல்லை. தமிழர்களின் அரசியல் போக்கு அவரோகணத்திலேயே உள்ளது. அவ்விதமானதொரு சூழலில் பொது வேட்பாளர் முடிவானது பொருத்தமான நகர்வாக அமையாது.

மேலும் தென்னிலங்கையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளராக இருக்கப்போகின்றவர்கள் சஜித் பிரேமதாசவும் அநுரகுமார திஸாநாயக்கவுமே.

இவர்கள் இனவாதத்துக்கு எதிராக ஒன்று திரண்ட 'அரகல'வின் சக்தியை அறிந்தவர்கள். ஆகவே அவர்கள் மீண்டும் சிங்கள, பௌத்த இனவாத விடயங்களை மையப்படுத்தி அரசியல் செய்வதற்கு விளைய மாட்டார்கள்.

அவ்விதமான சூழலில் நாட்டில் தற்போது சிங்கள, பௌத்த இனவாதத்தினை அரசியலில் இருந்து துடைத்தெறிவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலை தமிழ்த் தரப்பினர் சரியாக பயன்படுத்த வேண்டும்.

ஆகவே, அவர் சஜித், அநுர ஆகியோருடன் நீண்டகாலமாக காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கான குறுகிய மற்றும் நீண்டகால தீர்வுகள் சம்பந்தமாக பேச்சுக்களை முன்னெடுத்து தீர்வினை எட்ட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

# மும்பை - கொழும்பு நேரடி விமானச் சேவை

(கொழும்பு)

இந்தியாவின் மும்பையில் இருந்து கொழும்புக்கான நேரடி விமானச் சேவைகளை, இண்டிகோ விமான சேவைகள் நிறுவனம் நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய இண்டிகோவின் முதலாவது விமானம் முற்பகல் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மும்பையில் இருந்து கொழும்புக்கும் கொழும்பில் இருந்து மும்பைக்கும் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் குறித்த விமானச் சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# புலனாய்வு அமைப்புக்களின் பலவீனமே குற்றச் சம்பவங்களுக்கு காரணம்

## ரஜமஹா விகாரையின் பீடாதிபதி

(கொழும்பு)

நாட்டின் புலனாய்வு அமைப்புகள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பலவீனமே துப்பாக்கிச் சூடு மற்றும் குற்றச் சம்பவங்களுக்கு காரணம் என மிஹிந்தலா ரஜமஹா விகாரையின் பீடாதிபதி வலஹங்குனவே தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த துறைகளை பலப்படுத்தாமல் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவது சாத்தியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# இலங்கையின் பொருளாதாரம் நடப்பாண்டில் மிதமான வளர்ச்சியை எட்டும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி பச்சைக்கொடி

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் மிதமான வளர்ச்சியை எட்டும் என கணிக்கப்பட்டுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன்னணி பொருளாதார வெளியீடு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இலங்கையின் பொருளாதாரம் இரண்டு வருட தொடர்ச்சியான வீழ்ச்சியின் பின்னர் இந்த நிலைமையை காட்டுவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு நாட்டின் பொருளாதாரம் 1.9 சதவீத வளர்ச்சியைக் காட்டியுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரத்தில் 2.5 வீத வளர்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக குறித்த வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து மீண்டு வருவதற்கான அறிகுறிகளைக் காட்டிய நிலையில், நெருக்கடி நிலைமை மற்றும் பணவீக்கம் இப்போது ஒற்றை இலக்கத்திற்கு குறைந்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

கடினமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் பாராட்டுக்குரியது என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## மதுபோதையில் சாரத்தியம்;

# கைது செய்யும் பொலிஸாருக்கு சன்மானம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்தும் நபர்களை கைது செய்யும் பொலிஸ் அதிகாரிகளுக்கு பரிசு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் அறிவுறுத்தலின் பேரில் இது இடம்பெறவுள்ளது.

இதன்படி, மதுபோதையில் வாகனம் செலுத்தும் ஒருவரை கைது செய்யும் பொலிஸ் அதிகாரிகளுக்கு ஐயாயிரம் ரூபா வழங்கப்படும் என பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினத்தன்று மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கண்டறிவதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் இரத்த பரிசோதனை கருவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
மே.11,12.2024.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘தில்’ ஆக வென்றது டில்லி

## தொடர் தோல்விகளுக்கு முற்றுப் புள்ளி

லக்னோவுக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் குல்தீப் யாதவ், பிரேசர் - மெக்குர்க்கின் அபார ஆட்டம் கைகொடுக்க டில்லி அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது. லக்னோவில் நடந்த லீக் போட்டியில் லக்னோ - டில்லி அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ அணித் தலைவர் ராகுல் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

லக்னோ அணிக்கு குயின்ரன் டி கொக் (19) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். தேவ்தத் படிக்கல் (3) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் ராகுல், முகேஷ் குமார் வீசிய 6வது ஓவரில் 2 பவுண்டரி விரட்டினார். குல்தீப் யாதவ் "சுழலில்" ஸ்டாய்னிஸ் (8), பூரன் (0) சிக்கினர். தொடர்ந்து அசத்திய குல்தீப் பந்தில் ராகுல் (39) ஆட்டமிழந்தார். தீபக் ஹூடா (10), குர்னால் பாண்ட்யா (3) சோபிக்க வில்லை.

**சுப்பர் ஜோடி**

லக்னோ அணி 13 ஓவரில் 94/7 ரன் எடுத்திருந்தது. பின் இணைந்த ஆயுஷ் படோனி, அர்ஷத் கான் ஜோடி 8வது விக்கெட்டுக்கு 73* ஓட்டங்கள் சேர்க்க, லக்னோ அணி கௌரவமான ஸ்கோரை (167/7) பெற்றது.

**பலே படோனி**

பின் இணைந்த ஆயுஸ்படோனி, அர்ஷத் கான் ஜோடி அணியை மீட்டது. முகேஷ் வீசிய 15வது ஓவரில் வரிசையாக 2 பவுண் டரி அடித்தார் படோனி. முகேஷ் வீசிய 19ஆவது ஓவரில் 2 பவுண்டரி உட்பட 13 ஓட்டங்கள் எடுத்த படோனி, 31 பந்துகளில் அரைச்சதம் எட்டினார்.

20 ஓவர்களில் லக்னோ அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை எடுத்தது. படோனி (55), அர்ஷத் (20) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் டில்லி அணி சார்பில் குல்தீப் 3, கலீல் அகமட் 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

**மெக்குர்க் அரைசதம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய டில்லி அணிக்கு டேவிட் வோர்னர் (8) ஏமாற்றினார். பின் இணைந்த பிரித்வி ஷா, பிரேசர்-மெக்குர்க் ஜோடி நம்பிக்கை கொடுத்தது. யாஷ் தாகூர், அர்ஷத் கான் பந்தில் தலா ஒரு சிக்சர் விளாசினார் மெக்குர்க். நவீன், குர்னால் பாண்ட்யா ஓவரில் தலா 2 பவுண்டரி விரட்டிய பிரித்வி (32), பிஷ்னோய் "சுழலில்" சிக்கினார்.

பிஷ்னோய் வீசிய 11வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த கேப்டன் ரிஷாப் பன்ட், ஸ்டாய்னிஸ் வீசிய 12வது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண் டரி விரட்டினார். குர்னால் பாண்ட்யா வீசிய 13வது ஓவரில் "ஹட்ரிக்" சிக்சர் பறக்க விட்ட மெக்குர்க், 31 பந்தில் அரைச்சதம் கடந்தார். மூன்றாவது விக்கெட்டுக்கு 77 ஓட்டங்கள் சேர்த்த போது நவீன்-உல்-ஹக் பந்தில் மெக்குர்க் (55) ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய பன்ட் (41), பிஷ்னோய் பந்தில் "பெவிலியன்" திரும்பினார்.



பின் டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ஷாய் ஹோப் ஜோடி இணைந்து போராடியது. பிஷ்னோய் பந்தில் ஒரு பவுண்டரி அடித்தார் ஹோப். அர்ஷத் கான் பந்தை சிக் சருக்கு அனுப்பிய ஸ்டப்ஸ் வெற்றியை உறுதி செய்தார். டில்லி 18.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 170 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஸ்டப்ஸ் (15), ஹோப்(11) ஆட்டமிழக்காமல் இருந்தனர். லக்னோ சார்பில் பிஷ் னோய் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (ம-7)

## ஆகாய வெண்ணிலவாய் ரஷிட்

## சுனில் கவாஸ்கர் பாராட்டு





"ரஷித் கான் செல்லும் இடமெல்லாம் சிறப்பு தான். கிரிக்கெட்டின் அனைத்து துறைகளிலும் அர்ப்பணிப்பு உணர்வுடன்செயற்படுகிறார்," என கவாஸ்கர் பாராட்டினார்.

ஜெய்ப்பூரில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் ராஜஸ்தான் அணியை (196/3), குஜராத் (199/7) வென்றது. கடைசி ஓவரில் குஜராத் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அவேஷ் கான் பந்துவீசினார். துணிச்சலாக ஆடிய ரஷித் கான், முதல் மூன்று பந்தில் 10 ஓட்டங்கள் (4, 2, 4) அடித்தார். 4ஆவது பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தார். கடைசி பந்தில் பவுண்டரி விளாசி, அணிக்கு "திரில்" வெற்றி தேடித் தந்தார். சகலதுறை வீரராக அசத்திய இவர் (11 பந்துகளில் 24 ஓட். + 1 விக்.,) ஆட்டநாயகன் விருதை வென்றார்.

போர் பூமியான ஆப்கானிஸ்தானில் இருந்து புறப்பட்ட "சுழல்" புயல் தான் ரஷித் கான். 2017ல் ஐ.பி.எல்., அரங்கில் ஹைதராபாத் அணிக்காக அறிமுகமானார். 2022ல் குஜராத் அணிக்கு மாறிய இவர், 19 விக்கெட்டுக்கள் வீழ்த்தி, கிண்ணம் வெல்ல கைகொடுத் தார். கடைசி கட்டத்தில் துடுப்பாட்டத்திலும் அசத்துவார். அவுஸ்திரேலியாவின் பிக் பாஷ் (அடிலெய்ட் ஸ்டிரைக்கர்ஸ்), கரிபியன் பிரிமியர் (கயானா வோரியர்ஸ்), பாகிஸ்தான் சுப்பர் லீக் (குயிட்டா கிளாடியேட்டர்ஸ்) மேஜர் கிரிக்கெட் லீக் (எம்.ஐ., நியூயோர்க்) உட்பட உலகின் அனைத்து "ரி20" தொடரிலும் விளையாடி வருகிறார்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கவாஸ்கர் கூறியதாவது,

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத் தடுப்பு என கிரிக்கெட்டின் அனைத்து துறைகளிலும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்படுகிறார் ரஷித் கான். சரியான அளவில் துல்லியமாக பந்து வீசுகிறார். அணிக்கு தேவை என்றால், துடுப்பாட்டத்திலும் ஜொலிப்பார். பந்து வீச்சாளர்கள் "டைவ்" அடித்து பந்தை தடுக்க தயங்குவர். சில நேரங்களில் தோள்பட்டை பகுதியில் காயம் அடைந்தால் சிக்கல் ஏற்படும்.

இதை பற்றி கவலைப்படாத ரஷித் கான், துடிப்பாக "களத்தடுப்பு" செய்வார். களத்தில் 100 சதவீத திறமை வெளிப் படுத்துவார். இதனால்தான் உலகின் அனைத்து லீக் அணிகளும் இவரை ஒப்பந்தம் செய்ய ஆர்வமாக உள்ளன. இவ்வாறு கவாஸ்கர் கூறினார். (ம-7)

**பென் ஸ்டோக்ஸ் போல...**

ரஷித் கானை இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் உடன் ஒப்பிடலாம். ஐ.பி.எல்., தொடரில்இம்முறைஸ்ரோக்ஸ் பங்கேற்க வில்லை. இவர் எப்போது களமிறங்கினாலும் நூறு சதவீத பங்களிப்பை கொடுப்பார். இவர்களை போன்ற வீரர்களைத்தான் அணித் தலைவர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் ரொம்ப பிடிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருஷ வருஷப்பிறப்பு கருமங்கள்

| | | | |
|---|---|---|---|
| சுக். புதன். ராகு | சூரி. குரு | | சந் |
| சனி. செவ் | குரோதி வருஷ ஜாதகம் | | |
| | | | |
| | | லக் | கேது |

## வாக்கிய பஞ்சாங்கம்

சோபகிருது வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி (13.04.2024) சனிக்கிழமை முன்னிரவு 8.15 மணி, பூர்வபக்க சஷ்டி திகதியில் மிருகசீரிட நட்சத்திரத்தின் மூன்றாம் பாத்ததில் சோபனம் நாமயோகத்தில், கவுலவக் கரணத்தில், துலா லக்கினத்தில், மிதுன நவாம்சத்தில், சனி காலவோரையில், சனி சூக்கும வோரையில், தாமத குணவேளையில் இவ் புதிய குரோதி வருஷம் பிறக்கின்றது.

அன்று பிற்பகல் 4.15 மணிமுதல் அன்று பின்னிரவு 12.15 மணிவரை விஷுபுண்ணிய காலமாகும்.

| | | | |
|---|---|---|---|
| சுக். புத. ராகு. நெப் | சூரி. குரு. யுரே | | சந் |
| சனி. செவ் | புது வருஷ கிரக நிலை | | |
| | | | |
| | லக் | | கேது |

## திருக்கணித பஞ்சாங்கம்

சோபகிருது வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் நாள் (13.04.2024) சனிக்கிழமை முன்னிரவு 9.04 மணிக்கு குரோதி என்னும் பெயருடைய தமிழ்ப் புதுவருடம் உதயமாகின்றது. இது 60 வருட சுற்று வட்டத்தில் 38 ஆவது வருஷமாகும். அந்நேரம் நட்சத்திரம் மிருகசீரிடம் 4 ஆம் பாதம், திதி பூர்வபட்ச சஷ்டி.

சனிக்கிழமை மாலை 5.04 மணிமுதல் பின்னிரவு 1.04 மணிவரை மேட சங்கிரமண புண்ணிய காலமாகும். வருஷம் பிறக்கும் பொது உதய லக்கினம் விருட்சிகம் ஆக அமைகிறது.

## மருத்துநீர் தயாரித்தல்

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலட்டு காய்ச்சிக் கொள்க.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் புன்கிலையும், காலில் ஆலிலையும், வைத்து ஸ்நானம் செய்து கபிலம், பட்டுப் போன்ற வெண்மையான பட்டாடையாயினும் வெள்ளைக்கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து நீலக்கல், வைரம் முதலியவற்றாலாகிய ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விக்னேஸ்வரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து இயன்ற தான தருமங்களியற்றி, குரு, பெற்றோர், முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று உற்றார், உறவினர், நண்பர்களுடன் அளவளாவி, அறுசுவை உணவுடன் வேப்பம்பூ பிட்டு சேர்த்தருந்தி, தாம்பூலம் தரித்து, கண்ணாடியில் முகம் தரிசனம் செய்து புதிய வருஷப் பலன்களை வாசித்தும், கேட்டும் நன்குணர்ந்து தத்தம் சமய நூல்களை பாராயணம் செய்து மங்களகரமாகச் சயனஞ்செய்க.

மறுநாளாகிய குரோதி வருஷம் சித்திரை மாதம் முதல் திகதி 14.04.2024 ஞாயிற்றுக்கிழமை வைகறையில் துயிலெழுந்து மனத்தூய்மையுடன் வழிபடுங்கடவுளைத் தியானித்து தாம் முன் செய்தவைகளையும் மேற்செயற்பாலனவாகிய அறம், பொருள், இன்பங்களையும் சிந்தித்து, கண்ணாடி தீபம் நிறைகுடம் தன் வலக்கை தாய் தந்தை ஆசிரியரின் பாதம், தேவதைகளின் திருவுருவம் திருமுறைப் புத்தகம், தாமரை முதலிய பூக்கள், பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலிய மங்களப் பொருட்களை தரிசித்து, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து தங்கள் வீடுகளிலே சூரியனுக்கு பொங்கல், பூசை வழிபாடு செய்து முன்போலப் போசன பூசண தான தருமங்களியற்றி மங்களகரமாக வாழக்கடவர்.

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்.

மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம் 1.2,3 கால்கள், சித்திரை, விசாகம் 4 ம் கால், அனுசம், கேட்டை, அவிட்டம் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தான தருமங்களைச் செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

### கைவிசேஷம் - வாக்கிய பஞ்சாங்கம்.

14.04.2024 ஞாயிறு முற்பகல் 7.57 மணிமுதல் 9.56 மணிவரை
14.04.2024 ஞாயிறு முற்பகல் 9.59 மணிமுதல் 12.01 மணிவரை
15.04.2024 திங்கள் முற்பகல் 9.08 மணிமுதல் 9.51 மணிவரை
15.04.2024 திங்கள் முற்பகல் 9.55 மணிமுதல் 10.30 மணிவரை

### கைவிசேஷம் திருக்கணித பஞ்சாங்கம்

14.04.2024 ஞாயிறு முற்பகல் 10.00 மணிமுதல் 11.15 மணிவரை
14.04.2024 ஞாயிறு மாலை 6.30 மணிமுதல் 7.45 மணிவரை
15.04.2024 திங்கள் காலை 6.00 மணிமுதல் 7.25 மணிவரை
15.04.2024 திங்கள் முற்பகல் 9.35 மணிமுதல் 10.35 மணிவரை

# குரோதி வருஷத்திய (2024-2025) நட்சத்திர கந்தாய பலன்கள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அச்சுவினி | 02 | 01 | 00 | 10. மகம் | 05 | 01 | 02 | 19. மூலம் | 00 | 01 | 04 |
| 2. பரணி | 05 | 02 | 03 | 11. பூரம் | 00 | 02 | 00 | 20. பூராடம் | 03 | 02 | 02 |
| 3. கிருத்திகை | 00 | 00 | 01 | 12. உத்தரம் | 03 | 00 | 03 | 21. உத்திராடம் | 06 | 00 | 00 |
| 4. ரோகிணி | 03 | 01 | 04 | 13. அஸ்தம் | 06 | 01 | 01 | 22. திருவோணம் | 01 | 01 | 03 |
| 5. மிருகசீரிஷம் | 06 | 02 | 02 | 14. சித்திரை | 01 | 02 | 04 | 23. அவிட்டம் | 04 | 02 | 01 |
| 6. திருவாதிரை | 01 | 00 | 00 | 15. சுவாதி | 04 | 00 | 02 | 24. சதயம் | 07 | 00 | 04 |
| 7. புனர்பூசம் | 04 | 01 | 03 | 16. விசாகம் | 07 | 01 | 00 | 25. பூரட்டாதி | 02 | 02 | 02 |
| 8. பூசம் | 07 | 02 | 01 | 17. அனுஷம் | 02 | 02 | 03 | 26. உத்திராட்டாதி | 05 | 03 | 00 |
| 9. ஆயில்யம் | 02 | 00 | 04 | 18. கேட்டை | 05 | 00 | 01 | 27. ரேவதி | 00 | 00 | 03 |

**ஆதாய பலன்கள் இவ்வாறாக பலன் அறியவும்**

- முதல் கந்தாயம் சித்திரை மாதம் முதல் ஆடி மாதம் வரையிலும்.
- மத்திம கந்தாயம் ஆவணி மாதம் முதல் கார்த்திகை மாதம் வரையிலும்.
- கடைசி கந்தாயம் மார்கழி மாதம் முதல் வருடம் முடியும் வரை நடைபெறும்.
- முதலில் 0 ஏற்பட்டால் 4 மாதம் வரை கஷ்டம்.
- 2 ஆவது 0 ஏற்பட்டால் 4 மாதம் வரை தரித்திரம், நிம்மதி குறைவு ஏற்படும்.
- 3 ஆவது 0 ஏற்பட்டால் 4 மாதம் வரை தரித்திரம், நிம்மதி குறைவு ஏற்படும்.
- மூன்றும் 0 ஆனால் கஷ்டம், நிஷ்பலன், காரிய பங்கம், அலைச்சல் ஏற்படும் 0 இல்லையாயின் சௌக்கியம் தனலாபம் எதிர்காலம் யோகம் தரும்.

# இராசிபலன்

13. 04. 2024
பங்குனி 31, சனிக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 5.00 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 5.23 மணிவரை
சுபநேரம் 3.06-4.36 மணிவரை
இராகுகாலம்-9.06-10.36 மணிவரை

குரோதி வருஷப்பிறப்பு - முன்னிரவு 8.15 மணிக்கு
சந்திராஷ்டமம் - சித்திரை

வளவன்



குடும்பத்தில் குதுகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.



ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயம் ஏற்படலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.



தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகும்.



வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.



உறவினர் வழியில் மனம் நிறைவான செய்திகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ரோக பயமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.



நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்



பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



பூர்வீகச்சொத்துச் சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



உறவினர்கள் நண்பர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், மகிழச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

முதுமை உணர்[illegible] வயதைப் பொறுத்தது அல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னகர் கிராம மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு



(நெளுக்குளம்)
முள்ளியவளை கிராமத்தில் குடிநீரற்று அவதியுற்ற மக்களுக்கு ஈழுவர் குழுமத்தின் உதவியுடன் குடிநீரினை பெற்றுக் கொள்வதற்கான குழாய்க் கிணறு மீளமைக்கப்பட்டு நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட முள்ளியவளை மூன்றாம் வட்டாரம் பொன்னகர் கிராமத்தில் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் வசித்துவரும் மக்கள் குடிநீர் இல்லாத நிலையில் 25 நாட்களுக்கு மேல் அவதியுற்றிருந்தார்கள்.

இதனையடுத்து குறித்த கிராம மக்களால் முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசனுக்கு தெரிவிக்கப்பட்டதனை தொடர்ந்து ஈழுவர் குழுமத்தின் நிதி உதவியில் நேற்று குழாய் கிணறு மீளமைக்கப்பட்டு , அதற்கான மோட்டார் இயந்திரம் ஒன்றும் கிணற்றில் பொருத்தப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் முள்ளியவளை வடக்கு கிராம சங்க அபிவிருத்தி தலைவர், சமூக சேவையாளர் , பொன்னகர் கிராம சங்க அபிவிருத்தி தலைவர், செயலாளர், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள். (நி-5-6-299)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சி பழ உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபையின் தெரிவும் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு சங்கத்தின் மண்டபத்தில் தலைவர் சி.ஜெயசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது என அச்சங்கத்தின் செயலாளர் செ. ஜயச்சந்திரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

## டிப்பர் வாகனம் மோதி ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பரந்தன் ஏ-35 வீதியில் டிப்பர் வாகனம் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் முல்லைத்தீவு ஏ 35 வீதியின் பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று காலை துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் மீது பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.


விபத்தில் படுகாயமடைந்தவர் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-315)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.எல் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி அராலி ஏ.எல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று நடைபெறவுள்ள காலிறுதியாட்டத்தில் பிற்பகல் 3.45 மணிக்கு ஆணைக் கோட்டை யூனியன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும், பிற்பகல் 4.45 மணிக்கு நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணியும் மோதவுள்ளன. (நி-5-6-90)

## நல்லூரில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் புத்தாண்டு கண்காட்சி இன்றும்



(யாழ்ப்பாணம்)
புத்தாண்டை முன்னிட்டு யாழ். மாவட்ட உள்ளூர் முயற்சியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் முயற்சியாளர்களின் கண்காட்சியானது நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி இன்று வரை தொடர்ந்து யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் சிலைக்கருகில் உள்ள கிட்டு பூங்காவில் இடம்பெற்று வருகிறது.

யாழ் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் பங்கேற்றுள்ள சிறுதொழில் முயற்சியாளர்கள் தங்களது உணவுப்பத்திகள், பனைசார் உற்பத்திகள், காலணிகள், தைத்த ஆடைகள், பெண்களுக்கான கைப்பைகள், பூங்கன்றுகள் என பல்வேறு உற்பத்திகளையும் காட்சிப்படுத்தி உள்ளனர்.

தொழில்துறை திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்தி சபை, சிறுதொழில் அபிவிருத்தி முயற்சி பிரிவு, விதாதா வள நிலையம் போன்ற திணைக்களங்களோடு சேர்ந்து யாழ்மாவட்ட செயலகம், ஆளுநர் அலுவலகம், யாழ் மாநகர சபையின் பூரண ஒத்துழைப்போடு இக்கண்காட்சி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

## கால்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி லீக் அனுமதியுடன் AA SPORTS பிரதான அனுசரணையோடு கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகம் நடாத்தும் யாழ் மாவட்ட ரீதியிலான அணிக்கு 09 நபர் கொண்ட "றேஞ்சஸ் வெற்றிக் கிண்ணம்" கால்பந்தாட்ட போட்டி குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றீசியன் அணி மோதவுள்ளது. (நி-5-6-90)

## ஏற்று நீர்ப்பாசன திட்டத்தினை நடைமுறைப்படுத்தி தாருங்கள்

### மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)
கிளிநொச்சி அக்கராயனில் மூன்று இடங்களில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தினை நடை முறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கைகள் விடுத்துள்ளனர்.

அக்கராயன் குளத்தில் இருந்து தற்போது ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத் திட்டத்தின மூலம் 180 ஏக்கர் வரையான நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசனம் வழங்கப்படுகின்றது. இதனை விட கண்ணகைபுரம் மேட்டுப் பயிர்ச் செய்கைக்கான நீரும் வழங்கப்படுகின்றது.

இந்நிலையில் அக்கராயன் மத்தி, கொங்காதரன் குடியிருப்பு, அக்கராயன் கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு ஏற்று நீர்ப்புரசனம் திட்டத்தின் மூலம் நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் மத்தி, கிழக்கு, கொங்காதரன் குடியிருப்பு கிராமங்கள் நீர் நெருக்கடி மிகுந்த கிராமங்களாக கடல் மட்டத்தில் இருந்து 115 அடி உயரத்தில் காணப்படுவதனால் வறட்சி காலங்களில் கிணறுகளில் விரைவாக நீர் வற்றுவதன் காரணமாக ஏற்று நீர்ப்பாசனத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பயிர்ச்செய்கைகளில் மக்கள் ஈடுபடமுடியும்.

அத்தோடு நிலத்தடி நீரையும் பாதுகாக்க முடியும். எனவே மூன்று கிராமங்களில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தினை நடை முறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 150 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 155 | 180 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 150 | 150-200 | 200 |
| தக்காளி | 140 | 100 | 130 | 60-100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 100-140 | 160 |
| கோவா | 200 | 150 | 200 | 200 | 240 |
| கரட் | 350 | 360 | 350 | 320 | 400 |
| பூசணி | 150 | 140 | 140 | 120 | 140 |
| புடோல் | 120 | 200 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 80-100 | 160 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 400 | 270 | 350 |
| பாகற்காய் | 280 | 300 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 100-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | -- | 150 |
| பயற்றங்காய் | 180 | 250 | 100 | 200-300 | 120 |
| லீக்ஸ் | 300 | 200 | 250 | 230 | 300 |
| பீற்றூட் | 200 | 250 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 400-700 | 800 |
| போஞ்சி | 300 | 400 | 400 | 260 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 160 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 100 | 60-100 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 350-600 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 450 | -- | 350 |
| வெங்காயப்பூ | -- | 250 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 70 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 90 | 80 |
| ஈரப்பலா | 80 | -- | 120 | 70 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுக்கு அடிமையாவோர் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

## தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச அளவில் சுமார் 40,000 பேர் போதைப்பொருள் பாவனையால் உயிரிழக்கின்றனர் என தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.**

கஞ்சா பாவனையில் ஈடு பட்டவர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் எனவும் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் ஹெரோயின் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாக ஆபத்தான மருந்துகளுக்கான தேசிய போதைப்பொருள் வாரியம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பெரும்பான்மையான பாடசாலை மாணவர்களிடையே புகையிலையை பாவிக்கும் போக்கு காணப்படுகின்ற போதிலும் பாடசாலைகளில் ஐஸ் போன்ற போதைப் பொருட்கள் தொற்று நோயாக பரவும் அபாயம் இன்னும் இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் மொத்த சனத்தொகையில் 15 இலட்சம் பேர் புகையற்ற புகையிலை பாவனையிலும், இருபத்தைந்தாயிரம் முதல் முப்பதாயிரம் பேர் வரை பல்வேறு போதைப்பொருள் பாவனையிலும் ஈடுபட்டுள்ளனர் என்றும் அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

# மின்வடங்களுக்கு மேல் விழுந்த பனைமரம்

## தடைப்பட்ட மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக பனைமரமொன்று முறிந்து வீழ்ந்ததில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

சங்கானை 7 ஆம் கட்டையிலுள்ள தனியார் காணியொன்றில் நின்ற பனை மரம் திடீரென முறிந்து வீழ்ந்துள்ளது.

இதனால், இரு மின்கம்பங்கள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் அப்பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக கடும் வெப்பநிலையுடன் கூடிய காலநிலை நிலவுகின்ற நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்த வேளையே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (நி-5-6-33)

# மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதார வலுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்

(குருமன்காடு)

மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக சிறு விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் வீட்டு சார்ந்த விவசாயத் தொழில்களை வலுப்படுத்துதல் நிகழ்ச்சி திட்டம் 1500 பெண்களின் பங்களிப்புடன் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

2023 இல் பலம் அமைப்புடன் இணைந்து ஜப்பானிய துணை பட்ஜெட் உதவியின் கீழ் குடும்ப ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் "மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக சிறு விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் வீட்டு சார்ந்த விவசாயத் தொழில்களை வலுப்படுத்துதல்" என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தால் வவுனியா, வவுனியா தெற்கு மற்றும் வெங்கலச்செட்டிக்குளம் ஆகிய 03 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 52 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 1500 பெண்கள் பயனடைந்துள்ளார். இந்த திட்டத்தில் 30,000 கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் மாதாந்தம் 288,000 முட்டை உற்பத்தியை காணமுடிகிறது. இதுவரை, இருபது விவசாயிகள் மற்றும் இருபது பொருத்தமான நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இருபது ஏக்கர் பரப்பளவில் தொடர்ந்து கோழித்தீன்களை வழங்குவதற்காக சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பிரதேச செயலாளர்கள், செயற்றிட்டத்தின் முகாமையாளர், யுஎன்டிபி நிறுவன உறுப்பினர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் அரசாங்க மற்றும் நிறுவன உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப் பட்டது. (நி-5-6-250)




கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1987-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா:<br>சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்:A/L, Company (London)<br>எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14452 | பிறப்பு -1997- இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:30<br>உயரம்: 150 CM<br>தகைமை/தொழில்:BBA, Banking Assistants<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14483 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 15<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்:Higher National Diploma in Business Administration<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14454 | பிறப்பு-1971-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா: -<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L, Tailor<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டில் உள்ள மணமகன்<br>தொ.இ: G/14485 |
| பிறப்பு:-1993-இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:59<br>உயரம்:5' 8"<br>தகைமை/தொழில்:Bcom,Banker<br>எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள, அரச தொழில் புரியும் பெண்<br>தொ.இ: B/14455 | பிறப்பு -1994- இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா:26<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: Bsc (MIT), Senior Software Engineer<br>எதிர்பார்ப்பு:Degree Holder<br>தொ.இ: G/14487 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 21<br>உயரம்: 168 CM<br>தகைமை/தொழில்:-HNDE,TO<br>எதிர்பார்ப்பு:உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/14456 | பிறப்பு -1996-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா:23 1/4<br>உயரம் : 5' 9"<br>தகைமை/தொழில்:Bsc Chemistry(SP)<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ: G/14490 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# மீண்டும் அதிகரித்த கோழி இறைச்சியின் விலை

(கொழும்பு)

ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் சில்லறை விலை பொருளாதார மத்திய நிலையங்களில் நேற்று அதிக விலையில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ புதிய கோழி இறைச்சியின் சில்லறை விலை 1,400 ரூபா என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை தோல் இல்லாத கோழி இறைச்சி 1,300 ரூபாவாகவும் கறி கோழி ஒரு கிலோ 999 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)


லங்கா மஹறால் (PVT) LTD
DHL
உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஹெலிகொப்டர் விபத்தில் இராணுவ வீரர்கள் இருவர் பலி



(மணிலா)

பிலிப்பைன்சின் காவிட் மாகாணத்தில் இராணுவ பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர் ஒன்று விமானியின் கட்டுப்பாட்டை இழந்து கீழே நொருங்கி விழுந்ததில் இரு இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

காவிட் மாகாணத்தின் கடற்படைத் தளத்தில் வழக்கமாக நடைபெறும் இராணுவப் பயிற்சியில் ஈடுபடுவதற்காக, சாங்கி விமான நிலையத்திலிருந்து கடற்படைத் தளத்துக்கு ஹெலிகொப்டர் ஒன்று புறப்பட்டது.

ஆனால் புறப்பட்ட சிறிது நேரத்தில் அந்த ஹெலிகொப்டர் விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது. நிலை தடுமாறி கேவிட் சிட்டியில் உள்ள ஒரு சந்தைப்பகுதி அருகே ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியது.

ஹெலிகொப்டர் கீழே விழுவதை பார்த்த பொது மக்கள் பதறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இந்த விபத்தில் 2 கடற்படை வீரர்கள் உடல் சிதறி பலியாகினர். இதனையடுத்து இராணுவ பயிற்சிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# மீண்டும் உல...

## அச்சுறுத்தும் 'கக்...

### இரண்டு மாதங்களி...

(வோஷிங்டன்)

**சுவாச அமைப்பு தொடர்பான தொற்று நோயான கக்குவான் இருமல் உலகின் பல நாடுகளில் மீண்டும் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

உலகம் முழுவதும் வருடந்தோறும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கக்குவான் இருமல் நோயால் பாதிக்கப்பட்டு இறப்புகள் பதிவாகி வருகின்ற போதிலும், இந்த ஆண்டு அது அதிகரிப்பை காட்டுவதாக சர்வதேச ஊடகங்கள் கருத்து தெரிவிக்கின்றன.

குறிப்பாக சீனா, பிலிப்பைன்ஸ், நெதர்லாந்து, அமெரிக்கா மற்றும் இங் கிலாந்து ஆகிய நாடுகளில் இந்த நோயின் தாக்கம் அதிகரித்து

## ஷவர்மா சாப்பிட்ட 80 பேர் மருத்துவமனையில்

### ஜாம்பியாவில் சம்பவம்

(லுசாகா)

தென்னாபிரிக்க நாடான ஜாம்பியாவின் காப்பர்பெல்ட் மாகாணத்தில் உள்ள ஹோட்டலில் வாடிக்கையாளர்கள் ஷவர்மா வாங்கி சாப்பிட்ட சிறிது நேரத்தில் வாந்தி எடுத்து மயங்கிய நிலையில் 80 பேர் மீட்கப்பட்டு அருகே உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் ஷவர்மா சாப்பிட்டவர்களின் உணவில் விஷம் கலந்திருந்ததால் உடல்நலக்கோளாறு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர். மேலும் அவர்களுக்கு தீவிர சிசிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே புகாரின் பேரில் ஷவர்மா விற்ற ஹோட்டல் உரிமையாளரை பொலிஸார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## தேரோட்டத்தின் போது மின்கசிவு 13 குழந்தைகள் படுகாயம்

### ஆந்திராவில் துயரம்

(மகராஷ்ரா)

தேரோட்டத்தின் போது ஏற்பட்ட மின்கசிவில் சிக்கிய 13 குழந்தைகள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திரப் பிரதேச மாநிலம், கர்னூல் மாவட்டத்தில் உள்ள டெக்கூர் கிராமத்தில் யுகாதி பண்டிகையை முன்னிட்டு நேற்று காலை தேரோட்டம் நடைபெற்றது.

அப்போது உயர் மின்னழுத்த மின் கம்பியில் தேர் உரசி 13 குழந்தைகள் மீது மின்சாரம் பாய்ந்தது.

அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு கர்னூலில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். குழந்தைகளின் உயிருக்கு எவ்வித ஆபத்தும் இல்லை என மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். இருப்பினும் தொடர்ந்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தேரில் மின்சாரம் பாய்ந்து 13 குழந்தைகள் படுகாயமடைந்த சம்பவம் ஆந்திராவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (நி-5-6)

## இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும்

### ஈரானை எச்சரித்த இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர்



(ஜெருசலேம்)

தங்களது நாட்டின் மீது தாக்குதல் நடத்தினால் ஈரான் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடுமென இஸ்ரேலின் வெளியுறவுத் துறை அமைச்சர் 'இஸ்ரேல் கட்ஸ்' எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே இடம்பெற்று வரும் மோதல் போக்கானது நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது. இந்நிலையில் காஸா மீது கடந்த 6 மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திவரும் போருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருவதால் இரு நாடுகளுக்கு இடையேயும் போர் மூழும் சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது.


அந்தவகையில் சிரியா விள் டமாஸ்கசில் உள்ள ஈரான் துணை தூதரகத்தின் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஈரான் விரைவில் இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என எச்சரித்த நிலையில் ஈரான் தம் மீது தாக்குதல் நடத்தினால் ஈரான் மீது நேரடியாக தாக்குதல் நடத்தப்படும் எனவும் இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...க நாடுகளை ...க்குவான் இருமல்'

## ...ளில் 13 பேர் உயிரிழப்பு



வருவதாக கூறப் படுகிறது.

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மட்டும் சீனாவில் இருந்து 32,380 பேர் கக்குவான் இருமல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 13 இறப்புகள் ஏற்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

அத்துடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 20 வீத அதிகரிப்பு என சீன அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மேலும் கடந்த ஆண்டை விட பிலிப்பைன்சில் கக்குவான் இருமல் நோயாளிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# உடற்பயிற்சிக் கூடத்தில் தீ விபத்து-5 பேர் உயிரிழப்பு

## கொங்ஹொங்கில் துயரம்



(கின்ஷாசா)

கொங்ஹொங்கில் உள்ள கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் 11 பேர் காயமடைந்துள் ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

குறித்த தீ விபத்தானது நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் கட்டடத்தில் இருந்தவர்களை மீட்டதாக செய்தி வெளியாகியுள்ளது.

முதல் தளத்தில் உள்ள உடற்பயிற்சி கூடத்தில் தீ விபத்து ஏற்பட்டதாகவும், தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள் ளது. (நி-5-6)

# ரஷ்ய ஜனாதிபதி சீனா விஜயம்



(மொஸ்கோ)

விளாடிமிர் புடின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாகியதன் பின்னர் முதல் வெளிநாட்டு பயணமாக சீனா செல்லவுள்ளதாக சர்வதேச செய்திகள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீண்டும் ரஷ்யாவின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் முயற்சிகளில் புடின் ஈடுபட்டுள்ளார். அதனால் அவர் ஜனாதிபதியாக தெரிவாகி முதல் வெளிநாட்டு பயணமாக விரைவில் சீனா செல்ல உள்ளார்.

ரஷ்யாவில் கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அதிக பெரும்பான்மையுடன் ஜனாதிபதி விளாடிமிர் புடின் வெற்றி பெற்று ஐந்தாவது முறையாகவும் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

இந்தத் தேர்தல் ஜனநாயக முறைப்படி இடம்பெறவில்லை என பல நாடுகள் தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தன.

தேர்தலுக்கு முன்னர் மொஸ்கோ மன்றத்தில் பேசிய புடின், ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடும் மேற்கத்தேய நாடுகளுக்கு கடுமையான எச்சரிக்கையை விடுத்திருந்தார்.

புடின் ஜனாதிபதியானது முதல் மொஸ்கோ-பீஜிங் உறவுகளை ஆழப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன் இரு நாட்டு வர்த்தகத்தை பாரிய அளவில் உயர்த்தவும் உத்தேசித்துள்ளார்.

புடினின் பயணத்தில் சீனாவுக்கு எதிராக அமெரிக்கா வெளியிட்டுவரும் கருத்துகள் தொடர்பிலும் உக்ரைன் - ரஷ்ய போர் குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5-6)

# தென்கொரிய பாராளுமன்ற தேர்தல்

## படுதோல்வியால் பதவி விலகிய ஆளும் கட்சி

(சியோல்)

தென் கொரியாவின் பிரதமர் மற்றும் மூத்த ஜனாதிபதி, அதிகாரிகள் தங்கள் பதவியை இராஜினாமா செய்துள்ளனர்.

இந்நிலையில் பழமைவாத ஆளும் கட்சி பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்ததை அடுத்து அவர்கள் இராஜினாமா செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகள் ஜனாதிபதி யூன் சுக்யோலுக்கு பெரும் அரசியல் அடியாக அமைந்தது.

பிரதமர் ஹான் டக்-சூ மற்றும் யூனின் அனைத்து மூத்த ஜனாதிபதி ஆலோசகர்களும், பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு பொறுப்பானவர்கள் தவிர, தங்கள் இராஜினாமவை சமர்ப்பித்ததாக யூனின் அலுவலகம் தெரிவித்துள்ளது. மேலும் 2022 இல் ஒரே ஐந்தாண்டு பதவிக்கு பதவியேற்ற முன்னாள் உயர் மட்ட வழக்கறிஞரான யூன் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்ட நிலையில், தேர்தல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# வியட்நாம் நிதி மோசடி வழக்கு

## பெண் தொழிலதிபருக்கு மரண தண்டனை

(ஹனாய்)

வியட்நாம் நாட்டில் நிதி மோசடி வழக்கில் தொழிலதிபரான கோடீஸ்வர பெண்ணுக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. மற்றும் பல்வேறு நிதி சேவைகளிலும் முதலீடுகளை செய்துள்ளது.

வியட்நாம் நாட்டை உலுக்கிய இந்த நிதி மோசடி தொடர்பாக வழக்கு ஹோசிமின் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இதில் விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில், தொழிலதிபரான கோடீஸ்வர பெண் ட்ரூங் மை லானுக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்து




நீதிமன்றம் உத்தரவிட்டது.

சைகோன் ஜாயின்ட் ஸ்டாக் கமர்ஷியல் வங்கியின் 90% பங்குகளை வைத்திருந்த ட்ரூங் மை லான், 2012 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் போலி கடன் விண்ணப்பங்கள் மூலம் வங்கியிலிருந்து பணம் பெற்றதாக புகார் எழுந்தது. 10 ஆண்டுகளுக்கும் மேலான மோசடியில் வங்கிக்கு பல கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இது 2022 இல் வியட்நாமின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதம் என்று கூறப்படுகிறது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் மீண்டும் பேசுபொருளாகியுள்ள கச்சதீவு

## தேர்தல் பிரசாரத்தை நோக்கமாக கொண்டது



(கொழும்பு)

கச்சதீவு விவகாரத்தை பாரதிய ஜனதா கட்சி மீண்டும் கையிலெடுத்திருப்பது தேர்தல் பிரச்சாரம் தொடர்பான செயற்பாடு என இந்தியாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் மிலிந்த மொர கொடவின் பாத்பைண்டர் அமைப்பு தெரிவித்துள்ளது.

கச்சதீவை சுற்றியுள்ள குழப்பமான நிலை தொடர்ந்து நீடிக்கின்ற அதேவேளை தேர்தல் தொடர்பான பிரச்சார நடவடிக்கைகளிற்காக மீண்டும் கச்சதீவு விவகாரம் கிளறப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.

இந்திய பாராளுமன்ற தேர்தலில் இந்த விவகாரம் முக்கியமானதாக மாறியுள்ளது.

அவ்வப்போது இந்த பிரச்சினையை எழுப்புவதன் மூலம் இந்தியா கச்சதீவில் மீன்பிடிப்பதற்கான உரிமையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு முயல்கின்றது.

இலங்கையின் சட்டங்களின் படி இழுவைவலை மீன் பிடித்தல் சட்டவிரோதமானது என்பதை அலட்சியம் செய்து விட்டு தனது 4000 ட்ரோலர் படகுகள் இழுவைவலை மீன்பிடித்தலில் ஈடுபடுவதை இலகுவாக்குவதற்காக இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களிற்கு அனுமதி வழங்கவேண்டும் என இந்தியா கடந்த 25 வருடங்களாக வேண்டுகோள்விடுத்து வருகின்றது.

சர்வதேச கடல்எல்லையை தாண்டி ஆயிரக்கணக்கான ட்ரோலர்கள் இழுவைவலை மீன்பிடிப்பில் ஈடுபடுகின்றன.

இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறல்களுடன் ஒப்பிடுகையில் கைதுசெய்யப்படுபவர்களின் எண்ணிக்கை மிகச்சிறியதே எனினும் மீன்பிடி நலன்களால் தூண்டப்பட்ட தமிழ்நாடு அரசியல்வாதிகள் புதுடில்லியிடம் இது குறித்து முறைப்பாடு செய்வதை வழமையாக வைத்திருக்கின்றனர்.

கச்சதீவு தொடர்பில் தனக்கு இறைமை உள்ளபோதிலும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எதனையும் எடுக்காமல் அலட்சியமாக காணப்படுகின்றது என தெரிவித்துள்ள பாத்பைண்டர் அமைப்பு கச்சதீவில் மீன்பிடிதொடர்பான ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தவேண்டும்.

இலங்கை அதிகாரிகளின் கண்களில் அது வெற்றி நிலமாக காணப்படலாம் ஆனால் அது மூலோபாயரீதியில் முக்கியமானதாக காணப்படுகின்றது. அந்த பகுதி மீன்பிடி வளங்களை கொண்டுள்ளது என்பதை கருத்தில் கொள்ளும் போது அதனை ஆக்கபூர்வமாக பயன்படுத்தலாம் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-5-6)

# இந்தியாவில் சூடுபிடிக்கும் தேர்தல் களம் இலங்கைக்கு அழைப்பு விடுத்த பாஜக

(டில்லி)

இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதா கட்சி, இலங்கை உட்பட 25 நாடுகளைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை தமது நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இந்திய தேர்தல்களையும் அதனுடன் கூடிய பிரசாரத்தையும் பார்ப்பதற்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இந்த அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் அண்டை நாடுகள் போன்ற பல்வேறு பிராந்தியங்களின் பிரதிநிதிகள் இதில் உள்ளடங்குகின்றனர்.

தகவல்களின்படி இலங்கை நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் அரசியல் கட்சிகள் பாரதீய ஜனதாவிடம் இருந்து அழைப்புகளைப் பெற்றுள்ளன, தற்போதைய நிலவரப்படி, 15 நாடுகளின் பிரதிநிதிகளிடமிருந்து பங்கேற்றல் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டுள்ளன.

பாரதிய ஜனதா கட்சியின் வெளியுறவுத் துறைக்கு பொறுப்பானவரான. விஜய் சௌதைவாலே, இது தொடர்பான அழைப்புக்களை அனுப்பியுள்ளார்.

97 கோடி வாக்காளர்களுடன், இந்தியாவின் ஏழு கட்ட பொதுத்தேர்தல், ஏப்ரல் 19 ஆம் திகதி ஆரம்பித்து ஜூன் 4 ஆம் திகதி முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 93



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பறக்கும் தட்டு

1947 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை. கென்னத் ஆர்னால்டு என்று சொல்லி ஒரு அமெரிக்க வர்த்தகர். அவர் தன்னுடைய விமானத்திலே பறந்து கொண்டிருந்தார். வோஷிங்டனுக்குப் பக்கத்திலே காஸ் கேட் மலைகள் மேலே அந்த விமானம் பறந்து கொண்டிருக்கு. அப்போது தான் அவர் ஒரு அதிசயத்தைப் பார்த்தார்.சுமாராக ஒரு 25 மைல் தூரத்திலே, ஒன்பது வட்ட வடிவமான பொருட்கள், ஒரு சாய்வான நேர்கோட்டிலே அணி வகுத்து ரொம்ப வேகமாக பறந்து போய்க் கொண்டிருக்கு.

அதே சமயத்திலே ஒரு டகோடா விமானமும் பறந்து கொண்டிருந்தது. ஆர்னால்டு ரொம்ப கவனமாகப் பார்த்தார். அந்த வட்டங்கள் விமானத்தை விட அளவிலே சின்னதாக தெரிந்தது. ஒன்றோடு ஒன்று சங்கிலியாலே இணைத்தது மாதிரி தெரிந்தது. மலைச்சிகரங்களைத் தாவி தாண்டி பறந்து போய்விட்டது. மறுநாள் அமெரிக்கா முழுவதும் பத்திரிகைகளில் இது தான் முக்கியமான செய்தி! அந்த மர்மப் பொருளுக்கு பறக்கும்தட்டு என்று பெயரும் வைத்து விட்டார்கள்.

ஜனங்கள் எல்லாம் பார்த்தார்கள்.அவர்கள் சும்மா இருப்பாங்களா? உடனே நாங்கள் கூட பறக்கும் தட்டைப் பார்த்தோம்! என்று சொல்ல ஆரம்பிச்சார்கள். அது உண்மையா? பொய்யா? என்று கூட பார்க்காமல் பத்திரிகைகளிலே பரபரப்பாக செய்தி போட ஆம்பித்து விட்டார்கள். இவர் தான் பறக்கும் தட்டைப் பார்த்தவர். இது தான் பறக்கும் தட்டு என்று . பின்பு பார்த்தால்.

கனடா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஈரான் இப்படி பல நாடுகளிலேயும் பறக்கும் தட்டைப் பார்த்ததாக ஜனங்கள் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

எங்கள் ஊரிலே மட்டும் சும்மா இருப்பார்களா இவர்களும் சொல்ல ஆரம்பிச்சார்கள். நேற்று எங்கள் ஊர் அம்மன் கோயிலுக்கு நேராக வந்து பறக்கும் தட்டு மூன்று தடவை சுத்திவிட்டுப் போனது என்று. நமது பெயரும் பத்திரிகையில் வரணும் என்று சொல்லி நிறையப்பேர் கதை விட ஆரம்பித்தார்கள். செய்தி தானே தேவை. அதனாலே வரிந்து கட்டிக் கொண்டு அதை வாங்கி போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவரவர் விருப்பத்திற்கு அதுக்கு ஒரு உருவம் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

தட்டு மாதிரி இருந்தது என்றார் ஒருத்தர். தீப்பந்து மாதிரி இருந்தது என்றார் ஒருத்தர்.கோன் ஐஸ்கிறீம் மாதிரி இருந்தது என்றார் இன்னொருத்தர். வடை மாதிரி தெரிந்தது என்றார் ஒருத்தர். நான் பார்த்தது சுருட்டுமாதிரி இருந்தது என்றார் ஒருத்தர். கொஞ்ச நாளைக்கு பின்பு. மாவுரி தீவில் இருந்து ஒரு செய்தி வந்தது ஆர்னால்டுக்கு. வடைமாதிரி ஒரு மர்ம தட்டு. அது எரிகிற நெருப்பை பொழியுது.. என்று..

ஆர்னால்டு சும்மா இருப்பாரா? உடனே விமானத்தை எடுத்துக் கொண்டு பறப்பட்டார். போற வழியிலே சுமாராக 25 சின்ன பறக்கும் தட்டுகள் அவருக்குத் தெரிஞ்சதாம். உடனே அவர் விமானப்படைக்கு செய்தி அனுப்பினார். உடனே விமானப்படை விமானம் பறந்து வந்தது. ஆனால் பாருங்கள் துரதிஷ்டவசமாக அது விபத்துக்குள்ளாகி இரண்டு விமானப்படை அதிகாரிகள் செத்துப் போய்விட்டார்கள்.

அதுக்குப் பின்பு கொஞ்ச நாள் கழித்து மாவுரித் தீவுலிருந்து வந்த செய்தி வெறும் புரளி தான் என்று கண்டு பிடித்தார்கள். அப்படி ஒரு செய்தியை அனுப்பி கொஞ்சம் காசு சம்பாதிக்கலாம் என்று ஆசைப்பட்ட இரண்டு ஆசாமிகளோட கைவரிசைதானாம் அது. அதுவும் தெரிந்து போய்விட்டது. ஆனால். ஆர்னால்டு அதை நம்புவதற்கு மறுத்தார். கடைசி வரைக்கும் அவர் பறக்கும் தட்டைப் பற்றி எதையாவது பதுசு புதுசாக சொல்லிக் கொண்டே இருந்தார். 1948 ஜனவரி மாதத்திலே ஒரு நாள். வானத்திலே வட்டமான ஒரு வடிவம் தெரிந்தது. ஒரு விமானி அதைப் பார்த்துவிட்டார். உடனே துரத்த ஆரம்பித்தார். அவரோட விமானம் 30 000 அடி உயரத்திற்கு போய் விபத்துக்குள்ளாகிவிட்டது.

நாள் ஆக ஆக பறக்கும் தட்டு சம்பந்தமாக பல விதமான புரளிகள் கிளம்ப ஆரம்பித்து விட்டது. அமெரிக்க இராணுவத்துறை ஒரு விசாரணைக் கமிஷனே போடுகிற அளவுக்கு ஆகிவிட்டது. 15 மாதம் பல விதமான முயற்சிகளுக்கு பின்பு பறக்கும் தட்டு வெறும் புர்ளி தான் என்று அந்த கமிஷன் முடிவு செய்துவிட்டது. சரி... அப்படி என்று சில பேர் வட்டமாக எதையோ பார்த்தேன் என்று சொன்னார்களே. அது எல்லாம் பொய்யா? 1951 இல் தான் அதுக்கு விடை கிடைத்தது. அமெரிக்க கடற்படை காஸ்மிக் கதிர் ஆய்வுகளுக்காக நூறு அடி விட்டமுள்ள பலூன்களை வானத்திலே செலுத்தியிருக்கு. அந்த பலூன்களை பார்த்துவிட்டுத் தான் எல்லோரும் பறக்கும் தட்டு என்று நினைத்து பயந்து போனார்கள். பறக்கும் தட்டு என்னென்ன செய்யும் என்று சொன்னார்களோ அதையெல்லாம் அந்த பலூன்கள் செய்ய முடியும் என்று கண்டு பிடித்தார்கள். இதன் பின்பு பறக்கும் தட்டு புரளி கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்துவிட்டது.புரளியை கிளப்பிவிடுவது இருக்கே. அது ஒரு விதமான மனோவியாதி. ஒருத்தர் வானத்திலே ஏதோ ஒரு வட்டவடிவமான பொருளைப் பார்க்கிறார் அதை அடுத்தவரிடம் சொல்கிறார். அடுத்தவர் அதை நம்ப மறுக்கிறபோது இவருக்கு எரிச்சல் வருது. அதனாலேயே இவர் இன்னமுமம் புதுசு புதுசாக ஜோடித்துக் கொண்டே போறார்.

என்னப்பா இது.. நான் தான் என் கண்ணாலே பார்த்தேன் என்கிறேன். பின்பு என்ன பச்சையா ஒரு புகை கூட வந்தது. உள்ளே சிவப்பாக ஒரு பெண் உட்கார்ந்து கையை வெளியே நீட்டினதை கூட பார்த்தேன். இப்படி அடுக்க ஆரம்பித்துவிடுவார். இதிலே ஒரு பெரிய இடைஞ்சல். என்னென்றால் கடைசியிலே இவர் தான் சொல்கிற பொய்யை தானே நம்ப ஆரம்பித்துவிடுவார்.


இந்த மனோவியாதி பல விடயங்களிலே பல ஆசாமியிடம் இருக்கு. இவ்வளவு விவகாரங்களுக்கு மத்தியிலே எங்கள் ஊர் ஆசாமி ஒருத்தர் வேகமாக ஓடி வந்தார். சேர் பறக்கும் தட்டை நான் நிஜமாகவே என் கண்ணாலே பார்த்தேன். இப்பொழுது அது பறந்து கொண்டு தான் இருக்கு. நீங்க வேணும் எண்டால் என் கூட வாங்க.. நான் காட்டுகிறேன் என்றார். அத்தை கேட்ட இன்னொருத்தர் சரி.. காட்டுங்கள் பார்க்கலாம் என்று புறப்பட்டுப் போனார். அவர் சொன்னது நிஜம் தான் என்பதை புரிந்து கொண்டார். என்ன விடயம் தெரியுமா? அவர் அழைத்துக் கொண்டு போய் பக்கத்து வீட்டுக்குள் கொஞ்சம் எட்டிப்பாருங்கள். என்றார். இவர் மெதுவாக எட்டிப் பார்த்தார்.அந்த வீட்டுக்காரர் அசையாமல் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கார். அந்த அம்மாவுக்கு என்ன கோபமோ தெரியவில்லை.

அடுப்பங்கரையிலே இருந்து ஒவ்வொரு தட்டா பறந்து வந்து வெளியிலே விழுந்து கொண்டிருக்கு. இதற்கும் ஒரு விசார்ணைக் கமிசன் போட வேண்டியது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலஸ்தீன மக்களுக்கு

# தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பால் ரூ.1.5 மில்லியன் அன்பளிப்பு



(குருமன்காடு)

வவுனியா தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் ஏற்பாட்டில் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக பாலஸ்தீன உறவுகளுக்கான நிதியத்திற்கு ஒன்றரை மில்லியன் ரூபாய் பணம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் கடந்த திங்கட்கிழமை வரை வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைத்து தரப்பினரும் சகோதரத்துவ உணர்வோடு 150,0552 ரூபாய் பணத்தை வழங்கியிருந்தனர்.

குறித்த பணம் ஜனாதிபதி செயலகத்தில் உள்ள பாலஸ்தீன உறவுகளுக்கான நிதியத்திற்கு வழங்குவதற்காக நிதியத்தின் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு குறித்த அமைப்பினரால் கடந்த புதன்கிழமை வைப்பு செய்யப்பட்டது. (நி-5-6-250)

# ஆனைத்தலை மோட்டை குளத்தை புனரமைத்தால் சுமார் 200 ஏக்கரில் விவசாயம் செய்யலாம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஆனைத்தலை மோட்டை குளத்தினை புனரமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது புனரமைப்பின்றி காணப்படுகின்ற இக்குளத்தினை 2010 ஆம் ஆண்டில் இருந்து புனரமைப்பதற்கான கோரிக்கையினை இக்கிராம மக்கள் தொடர்ச்சியாக விடுத்து வருகின்றனர்.

நீர்ப்பாசனத் திணைக்களம் இக்குளத்தினை புனரமைக்க வேண்டும் எனும் முன்மொழிவுகளை அறிக்கைகளாக உலக வங்கி உட்பட பல தரப்புகளுக்கும் கையளித்துள்ளது.



ஆனால் குள வேலைகள் முன்னெடுக்கப்படவில்லை.

அதற்கு பிரதான காரணம் இக்குளம் அமைந்துள்ள பகுதி வனவளத்திணைக்களப் பகுதியில் அடங்குவதன் காரணமாக குளப்புனரமைப்புகளுக்கான தடைகள் உள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இக்கிராம மக்கள் ஒன்று திரண்டு குளத்தின் இரு பகுதியில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை புனரமைப்புச் செய்த போதிலும் குளத்தின் புனரமைப்புகள் முன்னெடுக்கப்படாததன் காரணமாக மீண்டும் குளம் உடைப்பு எடுத்துள்ளது.

இக்குளம் புனரமைக்கப்படுமானால் 200 ஏக்கருக்கு மேலான நிலப் பரப்பில் பயிர் செய்கை மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (நி-5-6-350)

# வெப்பத்தால் பாதிக்கப்பட்ட பறவைகளுக்கு நீர்த்தொட்டி அமைத்த இளைஞர்கள்

(குருமன்காடு)

கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட்ட பறவைகளுக்கு மரங்களில் தண்ணீர் தொட்டி அமைக்கும் செயற்பாட்டை வவுனியா இளைஞர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அதிக வெப்பமான கால நிலை நிலவுவதால் விலங்குகளின் நீர்த் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு வவுனியா - மன்னார் வீதியின் சில பகுதிகளில் மண் சட்டி மற்றும் சிரட்டைகளைப் பயன்படுத்தி இளைஞர்களினால் தண்ணீர்த் தொட்டி இன்று அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக பறவைகள் பல நீரின்றி அவதிப்படுகின்றன.

இந் நிலையில் இளைஞர்கள் சிலர் தாமாக முன்வந்து வவுனியா - மன்னார் வீதியில் காணப்பட்ட மரங்களில் மண்சட்டி மற்றும் சிரட்டை என்பவற்றை மரக்கிளைகளில் கட்டி அதற்குள் நீர் விட்டு தொட்டி அமைக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

இளைஞர்களின் மனித நேயமிக்க குறித்த செயற்பாடு பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-250)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3088

கபிலன்




செந்தூரன்




ரஞ்சன்




கீர்த்தனா




கோபிகா




சபிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 454





"புயல் வருகிறபோது வரட்டும் இப்போது கொஞ்சம் காற்று வந்தால் போதும்!" என்றார் இளவரசர். பிறகு அந்த மூதாட்டி எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் அங்கு வந்து சேர்ந்திருக்க முடியும் என்று தமது வியப்பைத் தெரிவித்தார்.

"என் அத்தைக்கு இது ஒரு பெரிய காரியம் அல்ல இதைவிட அதிசயமான காரியங்களை அவர் செய்திருக்கிறார்!" என்றாள் பூங்குழலி.

"மேலும் தங்களிடம் அவருக்கு இருக்கும் அன்புக்கும் அளவே கிடையாது. அன்பின் சக்தியினால் எதைத்தான் சாதிக்க முடியாது?" என்றாள்.

இந்தப் பேச்சையும் அந்த மூதாட்டி எப்படியோ தெரிந்து கொண்டு பூங்குழலியின் முகத்தைத் திருப்பி ஒரு திக்கைச் சுட்டிக்காட்டினாள். அங்கே அவர்கள் ஏறிவந்த யானை நின்று கொண்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் கம்பீரமான உயர்ந்த சாதிக் குதிரை ஒன்று நின்றதைக் கண்டு இருவரும் அதிசயித்தார்கள்.

"இந்தக் குதிரையின் மீது ஏறி இவர் வந்தாரா என்ன? இவருக்குக் குதிரை ஏறத் தெரியுமா?" என்று இளவரசர் வியப்புடன் கேட்டார்.

"அத்தைக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. குதிரை ஏற்றம், யானை ஏற்றம் எல்லாம் தெரியும். படகு வலிக்கத் தெரியும். சில சமயம் காற்றில் ஏறிப் பிரயாணம் செய்வாரோ என்று நினைக்கத் தோன்றும். அவ்வளவு சீக்கிரம் ஓரிடத்திலிருந்து இன்னோரிடம் வந்து விடுவார். எப்படி வந்திருக்க முடியும் என்று நமக்கு ஆச்சரியமாயிருக்கும்."

இளவரசர் அப்போது வேறொரு ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தார். கரையில் மேய்ந்துகொண்டிருந்த குதிரையின் கம்பீரத் தோற்றந்தான் அவருக்கு அத்தகைய வியப்பை உண்டாக்கியது.

"அரபு நாட்டில் வளரும் உயர்ந்த சாதிக் குதிரைகளில் மிக உயர்ந்த குதிரையல்லவா இது? எப்படி இங்கே வந்தது? எப்படி இந்த மூதாட்டிக்குக் கிடைத்தது?" என்று தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார்.

பூங்குழலி சமிக்ஞை பாஷையினால் இதைப்பற்றி ஊமை ராணியிடம் கேட்டாள். (ஆம் 'ஊமை ராணி' என்று இனி நாம் அந்த மூதாட்டியை அழைக்கலாம் அல்லவா?) 'யானை இறவு'த் துறைக்கு பக்கத்தில் இந்தக் குதிரை கடலிலிருந்து கரையேறியது என்றும், கரை ஏறியதும் தறிகெட்டுப் பிரமித்து நின்று கொண்டிருந்ததென்றும், ஊமைராணி அதை அன்புடன் தட்டிக் கொடுத்து வசப்படுத்தி அதன்மேல் ஏறிக் கொண்டு வந்ததாகவும் தெரியப்படுத்தினாள். இதைக் கேட்ட இளவரசரின் வியப்பு மேலும் அதிகமாயிற்று.

பேசிக் கொண்டிருக்கும் போதே பூங்குழலியின் கண்ணிமைகள் மூடிக்கொள்வதை இளவரசர் கவனித்தார். "முன்னமே தூக்கம் வருகிறது என்று சொன்னாய். நீ படுத்துக் கொள்!" என்றார். அப்படிச் சொன்னதுதான் தாமதம் பூங்குழலி அவ்விடமிருந்து சற்று விலகிச் சென்று படுத்துப் பக்கத்தில் கிடந்த கப்பல் பாய் ஒன்றை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். படுத்த சிறிது நேரத்துக்கெல்லாம் தூங்கிப் போனாள். அவள் மூச்சுவிட்ட தோரணையிலிருந்து அவள் தூங்கி விட்டாள் என்று தெரிந்தது. ஆனால் தூக்கத்திலேயே அவளுடைய வாய் மெல்லிய குரலில் பாட்டு ஒன்றை முணுமுணுத்தது. "அலை கடலும் ஓய்ந்திருக்க அகக்கடல் தான் பொங்குவதேன்?"

ஆகா! இதே பாட்டை வந்தியத்தேவன் நேற்று அடிக்கடி முனகிக் கொண்டிருந்தான்! இவளிடந்தான் கற்றுக்கொண்டான் போலும். மற்றொரு சமயம் சமுத்திர குமாரி விழித்துக் கொண்டிருக்கும்போது பாட்டு முழுவதையும் பாடச் சொல்லிக் கேட்க வேண்டும் என்று இளவரசர் எண்ணினார். உடனே ஊமை ராணியிடம் அவர் கவனம் சென்றது. ஆகா! எல்லாருக்குந்தான் சில சமயம் அகக்கடல் பொங்குகிறது! நெஞ்சகம் விம்முகிறது! ஆனாலும் வாய் திறந்து தன் உணர்ச்சிகளை என்றும் வெளியிட முடியாத இந்த மூதாட்டியின் உள்ளக் கொந்தளிப்புக்கு உவமானம் ஏது?


(தொடரும்..)



# சிறுவர் அரங்கம்

## சீலனின் தந்திரம்

(நேற்றைய தொடர்ச்சி)



நீங்கள் நினைத்தது சரியே. அந்த ஓவியத்தில் உள்ள பெண்மணி என் தாய். அந்தக் குழந்தைநானே. இதனை வரைந்த ஓவியனுக்கு என் தந்தை நூறு ஏக்கர் நிலம் பரிசாக அளித்தார். ஆனால், இப்போதோ நான் அந்த ஓவியத்தை விற்றுப் பிழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன்," என்றான்.

"இந்த ஓவியத்திற்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். நீயே இதன்விலையைச்சொல்," என்றான் சீலன். "எனக்கு இதற்காக நூறு பவுன்கள் கொடுத்தால் போதும். அதைக் கொண்டு நான் முன்னுக்கு வந்துவிடுவேன்," என்றான்.

"இவ்வளவு குறைவாகக் கேட்கிறாயே" என்று கேட்டார் சீலன். "அதற்கு மேல் நான் கேட்கமாட்டேன்!" என்றான் சக்தி. நூறு பவுன்களைக் கொடுத்து அனுப்பினான் சீலன். அன்று மாலை சீலன் தான் வாங்கிய ஓவியத்தை மன்னனிடம் காட்டினான். ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது. இதை எனக்குக் கொடுத்துவிடு, என்றான் மன்னன்.

"நான்தான் இந்த மாதிரி பொருள்களை யாருக்கும் கொடுக்க மாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமே. நீங்கள் கேட்டும் பயனில்லை!" என்று கூறிவிட்டான். சில வருடங்கள் சென்றன.

ஒரு நாள் சீலன் மன்னனுடன் பேசிக் கொண்டிருக்கையில் அங்கு வந்தான் சக்தி. அவனை அன்புடன் வரவேற்று மன்னனுக்கும் அறிமுகம் செய்து வைத்தான் சீலன்.

"நீ எப்படி இருக்கிறாய்?" என்று விசாரித்தான் சீலன்.

"ஐயா! நீங்கள் கொடுத்த நூறு பவுன்களைக் கொண்டு வியாபாரம் செய்யத் தொடங்கி இப்போது உயர் நிலையில் இருக்கிறேன். உங்களிடம் ஒரு உதவியை நாடியே இப்போது வந்திருக்கிறேன்," என்றான்.

"என்ன வேண்டும்?"

"நான் அந்த ஓவியத்தைத் தங்களுக்கு விற்ற நாளிலிருந்து எனக்கு மன நிம்மதியே இல்லை. தயவு செய்து அதை நீங்கள் எனக்குத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள். அதற்காக நீங்கள் என்ன கேட்டாலும் நான் கொடுக்கிறேன்," என்றான்.

சக்தியின் மன நிலை அவனுக்கு புரிந்தது. ஆனால், மன்னனோ தான் கேட்டும் அந்த ஓவியத்தைக் கொடுக்க முடியாது என்று கூறிய சீலன் என்ன செய்யப்போகிறான் என்று கூர்ந்து கவனிக்கலானான். "நான் ஒரு முறை ஒரு பொருளை வாங்கி விட்டால் அதை யாருக்கும் கொடுக்கமாட்டேன். இது என் கொள்கை," என்றான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதயபூர்வமாகவும் செய்யப் பட்டவையே – ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் அரசியலில் ஈனத்தனம் இருக்கும்வரை...

தமிழ் மக்களின் உரிமையை இன்னமும் வென்றெடுக்க முடியவில்லை எனும்போது அதற்கு முழுக் காரணமும் சிங்களப் பேரின வாதம் என்று கூறினால், அது மிகப்பெரும் தவறாகும்.

உண்மையில் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியாமல் போனமைக்கு தமிழ் அரசியல் தலைமைகளும் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்ற நினைப்பு நம் தமிழ் அரசியல் தலைவர்களிடம் இருந்திருக்கு மாயின், யுத்தம் முடிவுற்ற கையோடு அதற்கான வியூகத்தை அமைத்திருக்க வேண்டும்.

ஆனால், யுத்தம் முடிவுற்ற கையோடு தமிழ் அரசியல் தலைமைப் பொறுப்பில் இருந்தவர் மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு விசுவாசமாகச் செயற்படலானார்.

மகிந்த ராஜபக்ஷ தரப்பு எம் தமிழினத் துக்கு எதையும் தராது என்ற உண்மை தெரிந் திருந்தும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக ஆளும் தரப்புடன் சேர்ந்து எம் இனத்துக்கு துரோகம் இழைக்கப்பட்டது.

அதாவது யுத்தத்தின்போது, எங்களுக்கு ஏற்பட்ட இழப்பை எங்களின் பலமான ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டிய தமிழ் அரசியல் தலைமை; யுத்தத்தின் இழப்பை தமது சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டது.

இதன் காரணமாக இன்றுவரை எமக்கு நீதியும் கிடைக்கவில்லை. உரிமையும் கிடைக்க வில்லை. இதுவே உண்மை.

இருந்தும் அந்த உண்மையை உரக்கச் சொல்வதற்கு நம் தமிழ் மக்களும் தயாரில்லை.

மாறாக, தமிழ் மக்களின் உரிமை என்ற விவகாரத்தை அரசியல்வாதிகளிடம் ஒப் படைத்துவிட்டோம். இனி அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். எங்களுக்கும் எங்கள் உரிமைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பது போல நம் தமிழ் மக்கள் மௌன மாகிப் போக, தமிழ் அரசியல் தலைமைகள் தாம் தாம் நினைத்தபடி செயலாற்றின.

அதன் விளைவுதான் இன்றுவரை தமிழ் இனம் மீள முடியாத துன்பத்துக்கும் துயரத் துக்கும் ஆளாகியுள்ளது.

தவிர, தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் எதிர்வினையாற்றினாலும் தேர்தல் என்று வரும்போது தமிழ் மக்களிடம் சென்றால், அவர்கள் எங்களை வரவேற்பார்கள். இளை ஞர்கள் தங்கள் பாட்டில் இருப்பார்கள்.

அரசியல் நாட்டம் கொண்டவர்கள் மட்டும் கன்னை பிரிந்து நிற்பார்கள். சிலவேளை ஒரு சில இளைஞர்கள் அல்லது தமிழ்ப் பற்றாளர் கள் துணிந்து கேள்வி கேட்டால், அதற்கும் இருக்கிறது மருந்து. கேள்வி கேட்டவர் அவற்றை ஆள். அவருக்கும் புலனாய்வுக் கும் தொடர்பு உண்டு எனக்கூறிவிட்டால், அதை அப்படியே உள்வாங்கி காலம் முழுவதும் அதுவே நினைப்பாக வாழுகின்ற நம் தமிழ் மக்கள் தாங்களே பிரசாரம் செய்து கேள்வி கேட்டவனை எழ முடியாமல் விழுத்தி விடுவர்.

இந்த நிலைமைகள் நம் தமிழ் அரசியல் தரப்புகளுக்கு நன்கு தெரியும்.

என்ன செய்வது, இப்படியொரு அரசியல் ஈனத்தனம் எங்கள் ஈழத் தமிழினத்தைத் தவிர வேறு எந்த இனத்திலும் காண முடியாது என்பதுதான் உண்மை.

## மட்டுவில் ஸ்கந்தவரோதயாவில்
# இடைநிறுத்தப்பட்டிருந்த ஆரம்பப் பிரிவுகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் ஸகந்தவ ரோதயா மகா வித்தியா லயத்தில் இடைநிறுத்த ப்பட்டிருந்த தரம் 1 முதல் 5 வரையான ஆரம்ப பிரிவு வகுப்பு க்கள் மீண் டும் எதிர் வரும் 24 ஆம் திகதி யிலிருந்து கற்றல் நட வடிக்கைகள் ஆரம் பிக் கப்படவுள்ளது என கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சில வருடங்களாக இப் பாடசாலையில் ஆர ம்பப் பிரிவு வகுப்புகள் அதிகாரிகளால் இடை நிறுத் தப் பட் டிருந் தன.

இதையடுத்து குறி த்த பகுதி கல்வி சமூக த்தினரும் நலன் விரு ம்பிகளும் பெற்றோரும் தமது பாடசாலையில் ஆரம்ப வகுப்புக்களை இடைநிறுத்தி யமைக்கு எதிராக போராட்டங் களை முன்னெடுத்திரு ந்ததுடன் அவ்விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வினது கவனத்திற்கும் கொண் டுவந்திருந்த னர்.

குறித்த பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற் காக நேற்று பாடசாலை க்கு அமைச்சர் நேரில் சென்று ஆசிரியர்கள் , மாணவர்கள், பெற் றோர் மற்றும் கல்விப்பு லத்தினரின் கருத்துக் களை ஆராய்ந்தறி ந்தார்.

இந்நிலையில் குறி த்த பிரச்சினை தொட ர்பில் அமைச்சர் உட னடியாக துறைசார் தரப் பினரது கவனத்தி ற்கு கொண்டு சென்று மீள வும் குறித்த ஆரம்ப பிரிவு வகுப்பு க்களை ஆரம்பிப்பதற் கான நட வடிக்கையை அமை ச்சர் எடுத்திருந்தமை குறி ப்பிடத்தக்கது.(நி-5-6-33)

## புத்தாண்டு கொண்டாட்டம்
### வெளிநாடுகளுக்கு பறந்த அரசியல் பிரமுகர்கள்

(கொழும்பு)

சிங்கள - தமிழ் புத் தாண்டு விடுமுறை காரணமாக பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமை ச்சர்கள் பலர் வெளிநாடு சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறு ப்பினர்கள் பலர் வெளிநாடு சென்றுள்ளதுடன் அர சாங்கத்தின் உயர் அதி காரிகளும் வெளிநாடுக ளுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிலர் ஐரோப்பா உள் ளிட்ட தமது பிள்ளைகள் படிக்கும் நாடுகளுக்குச் சென்றுள்ளதுடன்.

மற்ற அமைச்சர்கள் வெளிநாடுகளில் இரு க்கும் தங்கள் விடு முறை இல்லங்களுக்குச் சென் றுள்ளதாக குறிப்பிடப்படு கிறது.மேலும் சில அமை ச்சர்கள் இலங்கையின் நுவரெலியா மற்றும் ஏனைய பிரதேசங்களில் புத்தாண்டை கொண்டாட உள்ளதாக .தெரிவிக்க ப்படுகிறது. (நி-5-6)

## மணிமண்டபம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

செல்வச் சந்நிதி ஆலய சுற்றாடலில் அம்மா மணிமண்டபம் புது வருட தினமான நாளை பி.ப 2 மணிக்கு திறக்கப்படவுள்ளது. (நி-5-6)

## விசேட பேருந்து சேவை;
### நாளாந்தம் 25 மில்.வருமானம்

(கொழும்பு)

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் விசேட பேருந்து சேவை யின் மூலம் நாளாந்த வருமானம் 25 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதாக இல ங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

பண்டிகைக்காலங்களில் கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்காக கடந்த 5 ஆம் திகதி முதல் சுமார் 200 கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டு சிறப்பு போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாளாந்த வருமானம் 25 மில்லி யன் ரூபாவால் அதிகரித் துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது முகாமை யாளர் பண்டுக ஸ்வர்ண ஹன்ச தெரிவித்துள் ளார்.

இதேவேளை, நெடுஞ் சாலைகளின் வருமானம் நேற்று முன்தினம் 10 வீதத்தால் அதிகரித்துள்ள தாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித் துள்ளது.

இதற்கிடையில், கடந்த 10 ஆம் திகதி முதல் ஏப்ரல் 15 ஆம் திகதிவரை கூடுதலாக 12 தொடரு ந்துகள் சேவையில் ஈடு படுத்தப்பட்டமை குறிப்பி த்தக்கது. (நி-5-6)

## புதுக்குடியிருப்பில் நீரில்
# மூழ்கி குடும்பஸ்தர் மரணம்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் வீதிக்கு அமைக்க ப்பட்ட பாலத்திற்கு கீழ் தேங்கி நிற்கும் நீரில் குளித்த ஒருவர் நீரில் மூழ்கி நேற்று முன் தினம் மரண மடைந் துள்ளார்.

தேவிபுரம் அ பகு தியை சேர்ந்த முனி சாமி திருச்செல்வம் என்ற 57 வயதுடைய குடும்பஸ் தரே குறித்த சம்பவத்தில் உயிரி ழுந்துள்ளார்.

புதுக் குடியிருப் பு பொலிஸ் பிரி விற்குட்பட்ட கைவேலி பகுதியில் வீதியில் அமைக்கப்பட்ட பால த்திற்கு கீழ் சுமார் பத்து அடி பள்ளத்தில் நீர் தேங்கி இருக்கின்றது. குறித்த பாலத்தில் அப் பகுதியை சேர்ந்த ஒரு வர் வழமையாக குளித்து வந்த நிலை யில் நேற்று முன் தினம் குறித்த இடத் தில் குளித்த போது நீரில் மூழ்கி மரண மடைந்துள்ளார்.

நேற்று சம்பவ இட த்திற்கு சென்ற முல் லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் உட லத்தை பிரேத பரிசோதனை க்காக மாவட்ட வைத் தியசாலைக்கு அனு ப்பி வைக்கப்பட்டுள்ள துடன் இது தொடர் பான மேலதிக விசா ரணைகளை புதுக் குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.(நி-5-6-299)

# விசேட அதிரடி படையினர் மீது தாக்குதல் நடத்த முயன்றவர் கைது

(மன்னார்)

விசேட அதிரடிப் படை வீரர் ஒருவர் மீது 17 வயதுடைய இளைஞன் தாக்குதல் நடத்தியுள்ள சம்பவமொன்று மன்னா ரில் இடம்பெற்றுள்ளது.

பாரிய குற்றச்செயல் ஒன்றுக்கு தயாரான சந் தேகநபர் ஒருவரை கைது செய்ய முற்பட்டபோதே, இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மன்னார் பெரிய கரிசல் பகுதியில் கடந்த புதன் கிழமை மாலை இந்த சம்பவம்இடம்பெற்றுள்ளது.

குற்றச் செயல் ஒன் றைப் புரிவதற்காக தயார் நிலையில் இருந்த நபர் ஒருவரை கைது செய்வ தற்காக விசேட அதிரடிப் படையினர் குறித்த பிர தேச த்தில் திடீர் சுற்றிவளை ப்பை நடத்தியுள்ளனர்.

இதன் போது கூரிய ஆயுதங்கள், மற்றும் 500 மில் லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 40 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்ப ட்டுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட நபரின் உறவினரான 17 வயதுடைய இளைஞன் ஒருவர் கூரிய ஆயுதத்தால், விசேட அதிரடிப் படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனால், விசேட அதிரடிப்படை வீரர் ஒரு வர் காயமடைந்த நிலை யில், மன்னார் பொது வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தையடுத்து தாக்குதல் நடத்திய 17 வயதுடைய இளை ஞனும் கைது செய்யப்பட்டு ள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவ ரும் மேலதிக சட்ட நடவ டிக்கைகளுக்காக மன் னார் பொலிஸ் நிலைய த்தில் ஒப்படைக்கப்பட்டுள் ளதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்து ள்ளனர்.சம்பவம் தொட ர்பான மேலதிக விசார ணைகள் இடம்பெற்று வருகின்றமை குறி ப்பிடத்தக்கது. (நி-5-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796–1832)

பகுதி IV

08

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அரசனுக்குச் சேவை செய்த இலாக்காக்களின் உறுப்பினர்கள் இவ்விதமாக நிலங்களைக் கிராமங்களில் பெற்றனர். உதாரணமாக கம்வாசம் என்பவை பட்டபந்தி மக்களுக்கு உரித்தான கிராமங்களாகும். அவர்களுடைய கடமை-திசாவை, மொஹட்டால, அத்தப்பத்து நிலமே, கொடித்துவக்கு நிலமே, கோறாளை என்பவர்களும், அவர்களது பரிவாரங்களும் தம் கிராமங்களினூடாகப் பிரயாணம் செய்யும் பொழுது அல்லது தங்கி நிற்கும்பொழுதும் அவர்களுக்கு வேண்டிய பொருள்களைச் சன்மானமின்றி வழங்குவதாகும்.

**நிந்தகம்**

நிந்தகம் என்பது, அரசனால் தனது உத்தியோகத்தருக்கு அல்லது தனிப்பட்ட ஒரு பிரஜைக்கு வழங்கப்பட்ட நிலமாகும். நிந்தகம் நிலங்கள், தொலைவிலுள்ள மாகாணங்களிலேயே கொடுக்கப்பட்டன. உடரட்டையில் அவை வழங்கப்படவில்லை.

அரச வயல்கள், கிராமங்கள் பல, பதவியின் பொருட்டுப் பிரதானிகளுக்கும், தனியாருக்கும், கையளிக்கப்பட்டபோது, அவை நிந்தகம் நிலங்களாயின. அக்காணிகள் சதாகாலத்துக்கு வழங்கப்படின், அவை பரவணி நிந்தகம் எனப் பெயர் பெற்றன. இவ்விதம் வழங்கப்பட்ட வயல்களில் அல்லது கிராமங்களில் வசித்த குடியானவர்கள், முன்பு அரசனுக்கு இறுத்த அத்தனை சேவைகளையும் இப்பொழுது புது எசமானனுக்கு இறுக்கக் கடமைப்பட்டனர்.

இந் நிலங்களினின்று, முன்னர் அரசன் பெற்ற வருவாய்களும் புது எசமானனுக்குச் சொந்தமாயின. அரசன் நல்கிய இக்கிராமங்கள், கொடுக்கப்பட்டோருக்குத் தேவையான குயவன், கொல்லன், வண்ணான், அம்பட்டன் எனும் தொழிலாளரைக் கொண்டிருந்தது. கிராமவாசிகள், கிராமத்தின் அரச நிலத்தைப் பயிரிட்டு தானியத்தைப் புது உரிமையாளனுக்குச் சேகரித்துக் கொடுத்தனர்.

புது உரிமையாளன், கிராமவாசிகளுக்கு அரச சேவையினின்று விடுதலை பெற்றுக் கொடுத்து அவனே அக்கிராமத்தின் அதிபதியானன். அவன் ஆண்டு தோறும் கண்டியில் அரசன் முன் சமூகங் கொடுத்த பொழுது, தனக்குத் தரப்பட்ட நிந்தகம் நிலத்தின் பெயரால் ஐந்து வெள்ளிக் காசுகளைத் திறையாகக் கொடுத்தான்.

இக்கிராமங்களில் வாழ்ந்த வேளாளர், புது எசமானரின் செய்கைக்காரராயினர். அவர்கள், தமது பரம்பரை நிலபுலங்களைப் பயிரிடுவதுடன், பிரதானியின் முத்தற்று நிலங்களையும் பயிரிட்டு வழக்கமான சரீர சேவைகளையும் செய்து வந்தனர்.

வருடத்தில் குத்தகைகள் பகிர்ந்து கொடுக்கப்படும் தினத்தன்று பிரதானி, தான் விரும்பாத செய்கைக்காரருக்குக் காணி கொடுக்காமல் கட்டாயமாக விலக்கவும், சேவை செய்யத் தவறியவர்களை நீக்கவும் உரிமை பெற்றிருந்தான். மறுபுறம் செய்கைக்காரருக்கும் தமது நிலங்களைப் பிரதானிக்குத் திருப்பி ஒப்படைத்து, சேவையினின்று விடுதலைபெற்றுக் கிராமத்தை விட்டு வெளியேற உரிமையிருந்தது.

நீண்ட காலக் குடியிருப்பினாலும், உடைமையினாலும் பரவணி உரிமைகளைப்பெற்ற செய்கைக்காரர், பிரதானிக்குச் செய்ய வேண்டிய சேவைகளை நிறைவேற்றி, திருப்திகரமான வாழ்வு நடாத்தி வந்தனர்.

பிரதானிகள் பரம்பரை உரிமையுடையவராயிருப்பின் செய்கைக்காரருக்கும் பிரதானிக்குமிடையே மிகவும் நெருங்கிய உறவுகள் ஏற்பட்டன. இத் தொடர்பு பல தலைமுறைகளுக்கு முறியாமல் இருப்பின், கிராமவாசிகள் தம்பிரபு மட்டில் பாசமும் அபிமானமும் கொண்டனர்.

பிரதானிகளினதும் பிரபுக்களினதும் தோட்டங்களில் நிலவிய சேவைகள் பல் வேறுபட்டவை. தலைமைக்காரரும், முதியான்சால என்போரும் பல வகையான கௌரவச் சேவைகள் புரிந்தனர்.

வேளாள செய்கைக்காரர் பிரதானியின் முத்தற்று நிலங்களைப் பயிரிட்டனர், பிரதானியுடன் பிரயாணங்களில் கூடிச் சென்றனர், அல்லது வீட்டுக் கருமங்களை முறைப்படி செய்தனர். துறே நிலக்காரர், பிரதானியின் பல்லக்கையும் பொருள்களையும் காவுவர் வஹம்புறே நிலக்காரர் குடும்பப் பெண் மணிகளின் பல்லக்குகளைக் காவுவதுடன் சமையலறைப் பணிகளையும் புரிந்தனர்.

இவ்விதமாகப் பிரதானியின் வீட்டுக்குத் தேவையான சேவைகள் யாவும் மிக அவதானத்துடன் ஒழுங்கு செய்யப்பட்டன. பல கிராமங்களையுடைய ஒரு பிரதானி, சமையற்காரரை ஆண்டில் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு கிராமத்திலிருந்தும், அடுத்த 4 மாதங்களுக்கு பிறிதொரு கிராமத்தினின்றும், அடுத்த 3 மாதங்களுக்கு மூன்றாம் கிராமத்திலிருந்தும் பெற ஒழுங்குகள் இருந்தன.

குயவன் ஓடுகளையும், மட்பாண்டங்களையும் சமைத்துக் கொடுத்தான். கொல்லன் பித்தளைப் பொருள்களைத் துலக்கியும், விவசாயக் கருவிகளை ஆக்கியும் திருத்தியும் கொடுத்தான். சுண்ணாம்பு எரிப்போன் சுண்ணாம்பு கொடுத்தான். சலவைத் தொழிலாளி, பாய் இழைப்போன், மற்றும் தோட்டத்தில் இறக்கும் மிருகங்களைப் புதைக்கும் கீழ் சாதியினரான றொட்டியா யாவரும் பிரபுவுக்குச் சேவை செய்தனர்.

மற்றையோர் வயல்களில் விளைந்த தானியங்களை ஏற்றவும், துறைமுகப் பட்டினங்களிலிருந்து உப்பு, மீன் என்னும் பொருள்களைக் கொண்டுவரவும் எருதுகளைக் கொடுத்தனர்.

**விகாரகம், தேவாலகம்**

அரசன், தேவாலயங்களுக்கும் சமயக் குரவர்களின் பராமரிப்புக்கும் வழங்கிய நிலங்கள் முறைப்படி விகாரகம் அல்லது தேவாலகம் என வழங்கப்பட்டன. பிரஜைகளும், விகாரைகளுக்கு நிலங்களை நன்கொடையாகக் கொடுப்பதும் ஒரு சாதாரண வழக்காகவிருந்தது. ஆனல், அவர்கள் அரசனிடம் அதிகாரம் பெற்ற பின்னரே, அவ்விதம் செய்யலாமெனச் சட்டம் இருந்தது.

ஏனெனில் கோவில் நிலங்கள் யாவும் அரச சேவைகளின்றும், வரிகளினின்றும் விலக்கப்பட்டிருந்தமையினால், இந் நன்கொடைகளினால் அரசன், வருவாயையும் சேவைகளையும் இழக்க நேரிட்டது.

மல்வத்தை, அஸ்கிரிய சமய நிலையங்களே கண்டி இராச்சியத்தின் பிரதான சமய நிறுவகங்களாகும். இவற்றிற்கும், ஒவ்வொரு கிராமத்தின் விகாரை, பன்சாலை எனும் ஸ்தல நிறுவகங்களுக்கும் சொந்தமான நிலங்கள் ஒவ்வொரு கிராமத்திலுமிருந்தன.

விகாரைகளுக்குச் சொந்தமான நிலங்கள் விகாரகம் என்றும், விஷ்ணு,பத்தினி, கதிர்காமத் தெய்வங்களுக்கெனக் கட்டப்பட்ட ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் தேவாலகம் என்றும் வழங்கப்பட்டன. விகாரகம் நிலங்கள் யாவும், பொதுவாக நிந்தகம் நிலங்கள் போன்றே பரிபாலனம் செய்யப்பட்டன. முத்தற்று நிலங்களில் குத்தகைக்காரரினல் பயிரிடப்பட்ட தானியம், விகாரையைப் பேணிச்சமயத்தை வளர்த்த பிக்குகளின் பராமரிப்புக்கெனக் கொடுக்கப்பட்டது.

குத்தகைக்காரர் திறைகள் இறுத்தனர், பலவித சேவைகள் புரிந்தனர், விகாரையுடன் சேர்ந்த கட்டடங்களைப் பழுது பார்த்து நன்னிலையில் வைக்க உதவி புரிந்தனர். உரிமையாளரான பிக்குகள் திறை வகையிலோ, சேவை வகையிலோ எவ்வித இராசக்காரியமும் புரியவில்லை.

தேவாலகம் நிலங்களில் வேறுபட்ட ஒழுங்குகள் காணப்பட்டன. தேவாலயத்தின் பிரதான அதிகாரி பசநாயக்க நிலமே என அழைக்கப்பட்டான்.

அவன் அரசனால் நியமிக்கப்பட்டவன். அவனது பதவிக்கெனக் கொடுக்கப்பட்ட நில புலங்களிலிருந்தும், தேவாலய கிராமங்களின் மேல் பூரண அதிகாரம் செலுத்தியும், தேவாலயத்தின் சேவைகளுக்கான உத்தியோகத்தர்களை நியமித்தும் வருவாயைப் பெற்றான். தேவாலய நிலக்குத்தகைக்காரர், தமது சேவைகளையும் திறைகளையும் கோவிலுக்கு இறுத்தனர்.

தலதா மாளிகாவையும் இவ்வகையிற்றான் நிர்வகிக்கப்பட்டது. அதனுடன் விஷ்ணு, கதிர்காமம், பத்தினி, நத்த எனும் நான்காலயங்கள் ஒன்று சேர்ந்து இயங்கின. தலதா மாளிகாவையின் பிரதான அதிகாரியான "தியவத்தன நிலமே" (நீரைக் கொடுக்கும் அதிகாரி) அரசனால் நியமிக்கப்பட்டான்.

அவனே, அரசனின் குளிப்பறைச் சேவைகளையும் மேற்பார்வை செய்தான். அவ்வாலயத்தின் பராமரிப்புக்கென விசாலமான நிலங்களிருந்தன. தலதா மாளிகாவையின் பிக்குகளும், பணிவிடைக்காரரும் இந்நிலங்களின் வருவாயினின்றே தமது ஊதியங்களைப் பெற்றனர்.

இராசக்காரியம் என்ற பதம் அரசனுக்குரிய கடமை (அல்லது சேவை) எனப் பொருள்படும். அது தனிமனிதர்களும் நிலமுடையவர்களும் அரசனுக்கு இறுக்க வேண்டிய சரீர சேவையை அல்லது திறையைக் குறிக்கும்.

இராசக்காரியம் மூவித கடமைகளை உள்ளடக்கியது. அவை

1. எல்லாப் பிரஜைகளும் அரசனுக்கு இறுக்க வேண்டிய தானிய வரி.
2. போர்க் காலங்களிலும், அவசர காலங்களிலும் மக்கள் அரசனுக்குச் செய்ய வேண்டிய விசேட கடமைகள்.
3. நிலமுடையவர்கள், அரசனுக்கு (அல்லது அவனது பிரதிநிதிக்கு) சரீர சேவையில் அல்லது பண, திறை வகைகளில் இறுக்க வேண்டிய கடமைகள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில்...

அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா உறுதியாகியுள்ளது.

உயிரிழந்த நபர் சிகிச்சை பெற்று வந்த விடுதியில் உள்ள நோயாளிகள் மற்றும் பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கருதப்படும் இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

## நீர்ப்பாசன...

தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,315,316)

## டிப்பர் வாகனம்...

இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கோண்டாவிலில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டி ஒன்றுக்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது முற்பகல் 11.30 மணியளவில் கைதடி - மானிப்பாய்வீதியில்உள்ள கோப்பாய் பத்தாம் கிலோமீற்றர் மைல் கல்லுக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்தபோது எதிரே மணலுடன் வந்த டிப்பர் வாகனம் திடீரென காற்று போய் இழுத்துச் சென்று மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது.

இதில் படுகாயங்களுக்குள்ளானவர் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

யாழில் இந்து நாகரிகம் மற்றும் தமிழ் பாடங்களை உயர்தர மாணவர்களுக்கு கற்பிப்பதில் சிறந்து விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33,60)

## குடும்பப்...

பட்டிருந்த துணியை இழுத்தபோது மண்ணெண்ணெய் அடுப்பு குடும்பப் பெண் மீது விழுந்து தீப்பற்றியதில் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம்கொட்டடியைச் சேர்ந்த சு.இலங்கேஸ்வரி (வயது- 39) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

இம்மாதம் மூன்றாம் திகதி மண்ணெண்ணை அடுப்பை பற்றவைத்து விட்டு பிட்டுக்கு மாக்குளைத்துக் கொண்டிருந்தபோது மண்ணெண்ணெய்அடுப்பில் சிக்கி இருந்த துணியை கீழிருந்து இழுத்தபோது மண்ணெண்ணெய் அடுப்பு குடும்பப் பெண் மீது வீழ்ந்து தீப்பற்றியுள்ளது.

தீக்காயத்துக்குள்ளான பெண்ணை உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## கார் - மோ.சைக்...

முன்தினம் இரவு 7.30 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் பூநகரி பள்ளிக்குடாவைச் சேர்ந்த இராஜலிங்கம் சங்கீதன் (வயது-36) என்பவரே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி பூநகரி வாடியடி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கார் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்

விபத்து தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## ஜனாதிபதித்...

சிறீதரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முன் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இருப்பினும், தற்போதைய நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுபவர்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட எந்தவொரு விடயங்களிலும் கரிசனைகளைக் கொண்டவர்களாக தம்மை வெளிப்படுத்தவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஆகவே, எந்த அடிப்படைகளுமின்றி தென்னிலங்கை வேட்பாளர்களை ஆதரிப்பது பொருத்தமற்றதொரு முயற்சியாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொது வேட்பாளரை நிறுத்துகின்றமை பொருத்தமான அணுகுமுறையாகும் எனத் தெரிவித்துள்ள சிறீதரன், இதுதொடர்பான கட்சியின் தீர்மானமும் முக்கியம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## உயர்தர...

ணங்களை மீள்பரிசீலனை செய்யும் பணி ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி தொடரும் என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## ஒழுக்காற்று...

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

கட்சியின் நிறைவேற்று சபையி

# குரோதி வருட விசேட வழிபாடு

(துன்னாலை)

வரலாற்று சிறப்புமிக்க வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய குரோதி வருஷப்பிறப்பு விசேட வழிபாடுகள் இன்று இரவு 8.15 மணியளவில் இடம்பெறவுள்ளது.

அத்தோடு நாளை ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 4.30 மணிக்கு சுப்ர பாத சேவை இடம்பெற்று 5.00 மணிக்கு உசற்கால பூசையை தொடர்ந்து 05.15 மணிக்கு விசேஷ அபிஷேகமும் இடம் பெறவுள்ளது.

காலை 6.00 மணிக்கு முதலாம் கால பூஜையும் அதனைத்தொடர்ந்து 6.15 மணிக்கு வசந்தமண்டபபூஜை இடம்பெற்று காலை 7.00 மணியளவில் மேஷசங்கிராந்தி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது

இதேவேளை கை விசேஷம் வழங்கலானது 7.30 மணிக்கும் பொங்கல் 8.00 மணிக்கும் இடம்பெறவுள்ளது. (ம-7)

# இரத்ததான முகாம்

(கொக்குவில்)

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகத்தால் புதுவருட தினத்தை முன்னிட்டு 20 ஆவது ஆண்டாகவும் தொடர்ந்து நடத்தப்படும் உயிர்காக்கும் உன்னத பணியான இரத்ததான நிகழ்வானது இன்று காலை 9 மணிக்கு பொற்பதி அறிவாலயத்தில் இடம் பெறவுள்ளது. (ம-7)

னால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும்போது ஏனைய கட்சிகளுடன் உடன்படிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு கட்சியின் ஒழுக்காற்று குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக சாகர காரியவசம் மேலும் தெரிவித்தார். (ம-7)

## யாழ்.செம்மணிப்...

தேச தரத்திலான கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்ட மைதானத்தை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவை நகர அபிவிருத்தி அதிகார சபை முன்வைத்துள்ள நிலையில் அதற்கான அனுமதியை கோரி யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழுவுக்கு திட்ட முன்மொழிவை சமர்ப்பித்துள்ளது.

இந்நிலையில் அமைச்சர் குறித்த பகுதியை நேரில் சென்று பார்வையிட்டார். முன்னதாக குறித்த விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட போது குறித்த பகுதியில் விவசாய நிலங்கள் மற்றும் மழை நீர் வழிந்தோடும் வழிகள் இருப்பதால் அப்பகுதியில் மைதானங்களை அமைப்பதில் உள்ள சாதக பாதகங்கள் குறித்து ஆராயப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் குறித்த பகுதிக்குகள விஜயம் சென்ற அமைச்சர் நிலைமைகளை அவதானித்ததுடன் விவசாயம் மற்றும் நீர் வழிந்தோடும் பொறிமுறையை உள்ளடக்கியதான தீர்வுகள் தொடர்பில் ஆராய்ந்து காணொளி வடிவிலாள திட்டவரைபை தனக்கு தருமாறு துறைசார் அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாடளாவிய...

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அண்மையில் இலங்கையில் உள்ள 72 சுகாதார தொழிற்சங்கங்கள் மற்றும் மேலும் பல தொழிற்சங்கங்கள் பணி விலகல் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தன.

தொழிற்சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டதன் பின்னர், பணி விலகல் ஆர்ப்பாட்டங்கள் கைவிடப்பட்டிருந்தாலும், குறித்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை முன்வைத்தும் போலி வாக்குறுதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமிழ் - சிங்கள புத்தாண்டை தொடர்ந்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தொழிற்சங்கங்களின் தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதன்படி ஆசிரியர்களுக்கான சம்பளம், பதவி உயர்வு, ஏனைய சலுகைகள் மற்றும் பாடசாலை பொருட்களுக்கான கட்டணங்களை குறைப்பதன் மூலம் பெற்றோருக்கான நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கல்வித்துறை சார் தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறையில் தற்போது பாரிய பிரச்சினையாக கருதப்படும் சம்பள மற்றும் ஏனைய சலுகைகள் தொடர்பான கோரிக்கைகளுக்கு இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என சுகாதார தொழிற்சங்க கூட்டணியின் இணை அழைப்பாளர் சானக தர்ம விக்கிரம கூறியுள்ளார்.

கிராம சேவகர்களின் நியமனம் தொடர்பில் நீண்ட காலம் நீடிக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தவறியுள்ளதாக இலங்கையின் கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், போக்குவரத்து சபையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படுமென எழுத்து மூலம் உறுதி வழங்கப்பட்டாலும் அது தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அகில இலங்கை போக்குவரத்து தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சேபால லியனகே தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக நீடித்து வரும் போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கான சம்பளப் பிரச்சினையை அரசாங்கமும் பொறுப்பதிகாரிகளும் தொடர்ந்தும் நிராகரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், புத்தாண்டு காலத்திலாவது தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் வழங்கப்பட வேண்டுமெனவும், இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவதாகவும் போக்குவரத்து தொழிற்சங்கத்தினர் எச்சரித்ததாக சேபால லியனகே மேலும் கூறியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Asian Furniture

ஏசியன் தளபாடத்தின்
மாபெரும் Sales

No 230, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்)
(C-0115)

**077 358 3879**
**076 821 9416**

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (395)

**074 17 37 684**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-0118)

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

**021 222 5686**
**076 424 7111**
(293)

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

## Techna

Techna Technical institute
Smart thinking leads to innovate
இ.வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

### A/L தொழினுட்பப்பிரிவு

**A/L 2024 DAY CLASS ஆரம்பம்**

17.04.2024 புதன்கிழமை, மாலை 3.30 மணிக்கு

| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | - M.விஷ்ணு, P.நிறோஜனன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | - S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - S.சக்தி |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT) | - T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஜீபன் |
| கணிதம் 07 | - T.சசிகரன் |
| புவியியல் | - S.P.கரன் |

(405)

A/L 2025, 2024 பிரிவுகள் நடைபெறுகின்றன.
2025 பிரிவினருக்கான BSTவகுப்புக்கள் இலவசமாக நடைபெறுகின்றது.

**077 170 3549**

## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0118)

## ஆடு விற்பனைக்கு

ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் 2 கிடாய் ஆடுகள் விற்பனைக்கு உண்டு.
(442)

**077 203 0309**

## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

(18.04.2024 வரை)
ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு தொடர்பு கொள்ளலாம்.
கலைமாமணி DR.S.S. சர்மா(குருஜீ) (435)

**075 99 811 77**

## 2023 - 2024 O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு
ஆசிரியர்
P.லக்‌ஷன் B.A (History)

காலம் – ஏப்ரல் 20, 21 சனி, ஞாயிற்றுக்கிழமை(காலை 8.00 மணி – 1.00 வரை)
- ஆர்வமுள்ள மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.
- எதிர்பார்க்கை வினாக்கள் விடைகளுடன் கையேடுகளாக வழங்கப்படும்.
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையில் குறித்துக் காட்டப்படும்.
- கட்டணத்தை செலுத்தி கருத்தரங்கில் பங்கு பற்றலாம்.

கோலா சிற்றி கல்வி நிலையம் 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 077 482 5438 (415)

## மணமகள் தேவை

1991 ஆம் ஆண்டு பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தற்பொழுது டுபாயில் வாகன இயந்திரம் பழுது பார்ப்பவராக பணிபுரியும் மணமகனுக்கு (உயரம் 6 அடி 4 அங்குலம்) பெற்றோர் பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
(439)

**075 7687 180**
**070 2432 477**

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் பலாலி வீதி செல்வா மஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் 7 1/2 பரப்பு காணி 15 அடி அகலப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
(427)

**077 229 4985**
**077 621 2039**

## பழைய பிளாஸ்ரிக் போத்தல் விற்பனையாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட பழைய பிளாஸ்ரிக் போத்தல்களை தூளாக்கும் இயந்திரம் 15 HP இப்பொழுது எம்மிடம்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



ஆர்க்.என்.கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020
Hotline : 071 535 7799/ 071 973 9917
(436)

## மணமகள் தேவை

1998 ஆம் ஆண்டு பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தற்பொழுது டுபாயில் பணிபுரியும் (மெக்கானிக்) மணமகனுக்கு (உயரம் 5 அடி 4 அங்குலம்) பெற்றோர் பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
(439)

**075 7687 180**
**070 2432 477**

## வேலையாட்கள் தேவை

**CHARTY BEACH RESORT**
சாட்டி கடற்கரை ஹோட்டல் (வேலணை)

**சமையல்காரர்**
- ☑ அனுபவம் விரும்பத்தக்கது

**சமையல் உதவியாளர்**
- ☑ அனுபவம் விரும்பத்தக்கது
- ☑ தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
- ☑ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

TILKO hotels
(434)

Charty, Velanai, Jaffna.
தொடர்புகளுக்கு : +94 77 965 5890
Tilko Jaffna City Hotel

## சிறிய முதலீட்டுடன் சிறிய கைத்தொழில் முயற்சி

சிறிய முதலிட்டினைக் கொண்டு மிக்சர், அரிசி மா, மிளகாய்த்தூள், மோர்மிளகாய், எலுமிச்சம்பழ ஊறுகாய் போன்ற இன்னும் பல உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்து கொள்ள முடியும். சிறிய ரக வாகனம்(டட்டா, மகேந்திரா) வைத்திருப்போர் விரும்பத்தக்கது. மேற்படி முயற்சிக்கு விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**076 9939 671** (426)

## விற்பனைக்கு

ஐம்பது அடி (50 அடி) நீளமுள்ள இரண்டு கோழிக்கூடுகள் (நிலக்கூடு) விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு :
(438)

**077 629 9675**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 264/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 165/= | |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 788/= | |
| 1 Kg மல்லி | - 367/= | |
| 1 Kg அவல் | - 255/= | |
| 1 Kg சர்க்கரை | - 299/= | |
| 1 Kg கடலை | - 480/= | |
| 100g பிளம்ஸ் | - 125/= | |
| 01 கற்பூர பெட்டி | - 265/= | ~~340/=~~ |
| 01 மங்களம் ஊதுபத்தி | - 160/= | ~~200/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 145/= | ~~175/=~~ |

1049/=



~~1110/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களறிக்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்
(441)

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## சிறிராம் ஜுவல்லர்ஸ்



- யாழ் நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்.
- 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-0119)

**077 165 1729, 077 773 0567**
**021 222 8334**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.